பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா. 6.00

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | கார்த்திகை 28 | ஞாயிற்றுக்கிழமை | (14.12.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 360

துரித தபால் பொதிகள் சேவை
உள்ளூர் வெளிநாடுகளுக்கான
சகல தபால்,பார்சல்கள் எதுவானாலும்
உடனுக்குடன் அனுப்புவதற்கு
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
Computer Systems
303, K.K.S. ROAD, JAFFNA
T.P : 021-222 2670
FAX. 222 3214
Email-del-smskr@eureka.lk

# நாட்டின் பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதியிடம் இருக்க வேண்டுமா?

## இல்லை என்கிறார் பிரதமர்

(நமது நிருபர்)

**பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதியிடம் இருக்க வேண்டுமென்று இலங்கையின் அரசியல் அமைப்பின் எந்தவொரு இடத்திலும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. அதற்கு மாறாகப் பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்துடன் இருக்கும் அரசாங்கத்துடன் ஜனாதிபதி இணைந்து செயற்படவேண்டுமென்றே அரசியல் அமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஐக்கிய தேசியக் கட்சியின் 49வது வருடாந்த மாநாட்டில் உரையாற்றும் போது தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய தேசியக் கட்சியின் 49வது வருடாந்த தேசிய மாநாடு நேற்று கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் தலைமையில் நடைபெற்றது.

அம்மாநாட்டில் தலைமை உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு பிரதமர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

2001ம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் ஒன்றை அமைத்து சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கான ஆணை மக்கள் அளித்துள்ளார்கள். மக்கள் ஆணைக்கு முரணாக ஜனாதிபதி முக்கியமான மூன்று அமைச்சுக்களின் பொறுப்புக்களை தனது அதிகாரத்தைப் பாவித்து தன்வசமாக்கிக் கொண்டார்.

பொது ஜன ஐக்கிய முன்னணி

மன்றத்தில் பெரும்பான்மைப் பலத்துடன் இருக்கும் அரசாங்கத்துடன் ஜனாதிபதி இணங்கி நடக்க வேண்டுமென்றே அரசியல் யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணிக்கு மக்கள் வழங்கிய ஆணைக்கு மாறாகவே ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களையும் தன்வசமாக்கிக்கொண்டார். இதன் காரணமாக அரசாங்கம் கடந்த 20 மாத காலமாக முன்னெடுத்துச்சென்ற சமாதான முயற்சிகள் தடைப்பட்டுள்ளன.

தற்போது தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகளை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்து வைக்கலாம் என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு. இந்த நம்பிக்கை வீண்போகாதவாறு நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த எவர் முன்வந்தாலும் அதற்கு நான் பூரண ஆதரவை வழங்க தயாராக

## எட்டு இந்திய மீனவர்கள் நெடுந்தீவுக் கடலில் கைது

(நெடுந்தீவு)

நெடுந்தீவுக் கடலில் அத்துமீறி மீன்பிடித் தொழில் ஈடுபட்ட 8 இந்திய மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்ட இவர்கள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஊர்காவற்துறை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

அவர்கள் அனைவரையும் நாளை திங்கட்கிழமை வரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதேவேளை மீனவர்களின் படகுகள் கடற்படையினரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன. (த)

## கைகால் கட்டப்பட்ட நிலையில் பற்றைக்குள் இருந்து சடலம் மீட்பு

### தொண்டமானாறுச் சந்தியில் பெரும் பரபரப்பு

(வல்வெட்டித்துறை)

முகம் மூடப்பட்டு கைகள், கால்கள் இரண்டும் பின்னால் கட்டப்பட்ட நிலையில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் தொண்டமானாறுச் சந்திக்கு அருகில் உள்ள பற்றைக்குள் இருந்து நேற்றுப் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை தீருவில் தெனியம்மன் வீதியைச் ...

கப்பட்டவராவார்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, வல்வெட்டித்துறை நகரில் பலசரக்குக் கடை வைத்திருக்கும் பிரஸ்தாப நபர், கடந்த 11ம் திகதி மாலை வீட்டுக்கு வராததையடுத்து குடும்பத்தவர்கள் அவரைக் காணாது தேடினர். எனினும் அவரை கண்டுபிடிக்க முடியவில்லை.

பொலிஸாருக்குத் தெரியப்படுத்தினர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு நேரில் சென்ற பருத்தித்துறை பதில் நீதிபதி வி.குமாரசாமி சடலத்தை பிரேதபரிசோதனைக்காக மந்திகை மருத்துவனையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

அங்கு பிரதமா தொடர்ந்து உரையாற்றுகையில்,

2001ம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் ஒன்றை அமைத்து சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வதற்கான ஆணை மக்கள் அளித்துள்ளார்கள். மக்கள் ஆணைக்கு முரணாக ஜனாதிபதி முக்கியமான மூன்று அமைச்சுக்களின் பொறுப்புக்களை தனது அதிகாரத்தைப் பாவித்து தன்வசமாக்கிக் கொண்டார்.

பொது ஜன ஐக்கிய முன்னணியினர் கூறிவருவது போல பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதியிடம் இருக்க வேண்டுமென்று இலங்கையின் அரசியல் யாப்பில் எந்தவொரு இடத்திலும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. ஆனால் அதற்கு மாறாக பாராளுக்கிக்கொண்டார். இதன் காரணமாக அரசாங்கம் கடந்த 20 மாத காலமாக முன்னெடுத்துச்சென்ற சமாதான முயற்சிகள் தடைப்பட்டுள்ளன.

தற்போது தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகளை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்து வைக்கலாம் என்பதில் எனக்கு நம்பிக்கையுண்டு. இந்த நம்பிக்கை வீண்போகாதவாறு நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த எவர் முன்வந்தாலும் அதற்கு நான் பூரண ஆதரவை வழங்க தயாராக உள்ளேன்.

எனது தலைமையிலான அரசாங்கத்திற்கு மக்கள் வழங்கிய ஆணையை எந்த வொரு தனிநபராலும் பறிக்க முடியாது. அவ்வாறான தீர்மானம் எதனையும் எடுப்ப

(10ம் பக்கம் பார்க்க)

## தொண்டமானாறுச் சந்தியில் பெரும் பரபரப்பு

(வல்வெட்டித்துறை)

முகம் மூடப்பட்டு கைகள், கால்கள் இரண்டும் பின்னால் கட்டப்பட்ட நிலையில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் தொண்டமானாறுச் சந்திக்கு அருகில் உள்ள பற்றைக்குள் இருந்து நேற்றுப் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை தீருவில் தெனியம்மன் வீதியைச் சேர்ந்த சுந்தரமூர்த்தி சூரியமூர்த்தி (வயது55) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, வல்வெட்டித்துறை நகரில் பலசரக்குக் கடை வைத்திருக்கும் பிரஸ்தாப நபர், கடந்த 11ம் திகதி மாலை வீட்டுக்கு வராததையடுத்து குடும்பத்தவர்கள் அவரைக் காணாது தேடினர். எனினும் அவரை கண்டு பிடிக்க முடியவில்லை.

இந்நிலையில் நேற்றுக் காலை மேற்படி சடலம் பற்றைக்குள் கிடப்பதை அவதானித்த மீன் வியாபாரிகள் அது பற்றி பருத்தித்துறைப் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தினர்.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு நேரில் சென்ற பருத்தித்துறை பதில் நீதிபதி வி.குமாரசாமி சடலததை பிரேதபரிசோதனைக்காக மந்திகை மருத்துவனையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

மருத்துவ மனையில் சடலம் பிரஸ்தாப நபரின் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டது. பின்னர் வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய

(10ம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் இளைஞர் ஒருவர் நேற்று மாலை சுட்டுக் கொலை

(வவுனியா)

வவுனியா குருமணகாடு பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

நேற்று மாலை 6.00 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் பொலிஸ் உத்தியோகத்தரின் மகனான வவுனியா கற்குழியைச் சேர்ந்த சஜித்குமார் என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்று மாலை வவுனியா குருமண்காடு பகுதியூடாக பிரஸ்தாப நபர் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த போது மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இளைஞர்கள் இருவர் அவரை கைத்துப்பாக்கியால் சுட்டுவிட்டு தப்பியோடியுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான பிரஸ்தாப நபர் ஸ்தலத்திலேயே உயிரிழந்தார். இச்சம்வம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த)

### சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி. கூட்டு

## அரசு-பொ. ஐ. முன்னணியின் சகவாழ்வைப் பாதிக்காது!

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி-ஜே.வி.பி கூட்டணி அமைப்பதற் கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ள நிலையில் இக்கூட்டணி உருவாக்கம் அரசாங்கத்திற்கும் பொ.ஐ.முக்கும் இடையே ஏற்படுத்தப்படவுள்ள சகவாழ்வை பாதிக்கும் என்ற கருத்தினை பொது ஜன ஐக்கிய முன்னணியின் பேச்சாளர் சரத் அமுனுகம நிராகரித்துள்ளார்.

அத்துடன், பொ.ஐ.மு தேசிய அரசாங்கம் அமைப்பதை பெரிதாக விரும்பவில்லை. ஆனால், சமாதானத்தை முன்னெடுக்க சில ஒப்பந்தங்களை மேற்கொள்ள இருககிறது என்றும் தெரிவித்தார்.

பாதுகாப்பு அமைச்சை ஜனாதிபதி வைத்திருப்பது அரசியற் சட்டத்திற்கு அமைவானது என்ற கருத்தை ஜீ.எல்.பீரிஸ் நிராகரித்தது பற்றிக் கூறிய அமுனுகம, அரசியல் யாப்பை வியாக்கியானம் செய்யக்கூடிய ஒரே நபர் ஜீ.எல.பீரிஸ் அல்ல. அவர் பாதுகாப்பு அமைச்சு ஜனாதிபதியிடம் இருப்பதை விரும்பவில்லை. ஆனால் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பினை மாற்றாது என்றார்.

(10ம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் தீவிரவாதத்தை ஒடுக்க உளவுப் பிரிவுக்கு இந்தியா உதவும்

### இராணுவத் தளபதி பலகல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

பலாலி விமான நிலைய ஓடு பாதையைச் சீரமைத்து நவீனப் படுத்த இந்தியா முன்வந்துள்ளது. இது தொடர்பான பணிகள் விரைவில் ஆரம்பமாகும் என இராணுவத் தளபதி ஜெனரல் லயனல் பலகல்ல தெரிவித்தார்.

தியத்தலாவை விமான தளத்தில் பயிற்சி பெற்று வெளியேறும் விமானப்படை வீரர்களின் அணி வகுப்பு மரியாதையையடுத்து நேற்று பத்திரிகையாளர் மத்தியில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.வடக்கில் பிரதான விமான நிலையமாக விளங்கும் பலாலி விமான நிலையத்தை நவீனப் படுத்தப்பட வேண்டியமை குறித்தும் அதன் ஓடு பாதையை திருத்தியமைக்க வேண்டிய அவசியம் குறித்தும் வெளிநாட்டு நிபுணர்களின் உதவியை எதிர் பார்த்திருந்த பொழுது இந்தியா இதற்கு உதவ முன் வந்துள்ளது.

மேலும் இந்தியாவுக்கான தமது ஐந்து நாள் உத்தியோகபூர்வ விஜயத்தின் மூலம் இவ்விடயம் சாத்தியமானதாகவும், பலாலி விமான நிலைய புனரமைப்புப் பணிகள் விரைவில் ஆரம்பமாகும் என்றும் இராணுவ தளபதி ஜெனரல் பலகல்ல தெரிவித்தார்.

இந்து சமுத்திரத்தின் பிராந்திய பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையில் ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இவ்விணக்கப்பாட்டின் அடிப்படையில் இந்து சமுத்திர பிராந்தியத்தில் இடம்பெறும் சமூக விரோதச் செயல்களுக்கு எதிராக இலங்கை, இந்திய மற்றும் கடலோரப்படைகள் இணைந்து செயற்படும். இலங்கை விமானப்படைக்கு தற்காலிகமாக

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரங்களை அரசு மட்டுப்படுத்துகிறது

## இலங்கை ம.உ.ஆ.கு.செயலாளர் சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

அரசின் நிதி உதவியை நம்பியே இயங்க வேண்டிய நிர்ப்பந்தம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு இருப்பதால், இந் நிலையைப் பயன்படுத்தி மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரங்களை அரசு மட்டுப்படுத்துகிறது.

இவ்வாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயலாளர் ஹேமா ஸ்ரீவர்த்தன தெரிவித்துள்ளார்.

நேற்றைய தினம் யாழ். வீரசிங்க மண்டபத்தில் நடைபெற்ற சர்வதேச மனித உரிமைகள் தினவிழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலக விசாரணை அதிகாரி பெரோஸ் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் உயர் நீதிமன்ற நீதிபதி எஸ் வரதராஜா, மனித உரிமைகள் சட்டத்தரணி எம்.றெமீடியாஸ், மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.இணைப்பதிகாரி றுவான் சந்திர சேகர உட்பட யு.என்.ஏச்.சி.ஆர், யு.என்.டி.பி.பிரமுகர்கள் மற்றும் பொலிஸார், மாணவர்கள், பேராசிரியர்கள், பொதுமக்கள் எனப்பலர் கலந்து கொண்டனர்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய ஹேமா ஸ்ரீவர்த்தன.

இலங்கையைப் பொறுத்தமட்டில் இனங்களிடையே காணப்படுகின்ற பேதங்களை விடுத்து சம உரிமைகள் பேணப்படவேண்டும் என்பதை பல தரப்புகள் வலியுறுத்தி வந்த போதிலும் அது பேச்சளவில் நின்று விடுகின்றது.

மாறாக மனித உரிமை மீறல் சம்பவங்கள் அதிகரித்தே வருகின்றன குறிப்பாக தமிழ் மக்கள் இன மொழி மத ரீதியாக வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். மனித உரிமைகளை பேணிப்பாதுகாப்பதுடன் அவை மீறப்படும் சந்தர்ப்பங்கள் குறித்து விசாரணைளை நடத்தும் அதிகாரங்



கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைகுழுவிற்கு காணப்படுகின்ற போதும் விசாரணைகள் மூலம் தீர்ப்பளிக்கவும் அந்தத் தீர்ப்புக்களை நடைமுறைப்படுத்தவும் அதிகாரங்கள் தேவையாக இருக்கின்றன.

ஆனால் மனித உரிமைகள் ஆணைக்குழு மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரத்துடனேயே இயங்க வேண்டிய சூழ்நிலை காணப்படுகிறது.

இதைவிட அரசாங்கத்தின நிதி உதவி மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாட்டில் அதிக செல்வாக்கைச் செலுத்துவதால் அரசாங்கம் இதற்குள்ள அதிகாரங்களை தன் அரசியல் பலத்தால் மட்டுப் படுத்தியுள்ளது.

இதனால் மக்கள் சமூகத்தின் எதிர்பார்ப்பை ஈடுசெய்ய முடியாமல் உள்ளது.

இலங்கையின் அடிப்படை அரசியல் சட்டமூலத்தில் மனித உரிமைகள் பற்றிய விடயங்களைப் புகுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். எதிர் காலத்தில் இவ்வாறு நடவடிக்கைகளை மேற்கொள்ள உரிய பரிந்துரைகளை வழங்க பாராளுமன்றத் தெரிவுக்குழு மனித உரிமைகள் ஆணைக் குழுவிற்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.


அத்துடன் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டு வரும் சமாதானப் பேச்சுவார்த்தைகளில் மனித உரிமைகள் பற்றிய அவதானிகளாக எம்மை அனுமதித்தமை ஒரு வரவேற்கத்தக்க விடயம் என குறிப்பிட்டார்.

அங்கு உரையாற்றிய யாழ்.மேல் நீதிமன்ற நீதிவான் எஸ்.வரதராஜா,

யாழ்.மாவட்டத்தை பொறுத்தவரையில் மனித உரிமைகள் அதிக அளவு மீறப்படுவதாகக் காணப்பட்டாலும், மனித உரிமைகளை மீறும் ஸ்தானங்களில் உள்ள அதிகாரிகள் இவ் ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்கு அஞ்சி தமது கடமைகளைச் சரிவர ஆற்றுவதுடன் தமக்கு கீழ்ப்பட்டவர்களின் உரிமைகளை பேணும் விதமாக சுதாகரித்து நடத்து கொள்வதை அவதானிக்க முடிகின்றது.

அரச மற்றும் அரச சார்பற்ற தனியார் அமைப்புக்களில் நடைபெறுகின்ற மனித உரிமைகளை மீறும் செயற்பாடுகளை அவதானித்து பரிகாரங்களைத் தேடிவரும் இவ் ஆணைக்குழுவிற்கு , உரிமை மீறல்களை விசாரணை செய்யவும் விசாரணைகள் தொடர்பான பரிந்துரைகளை வழங்கவும் தீர்ப்புகளை வழங்கவும் அதனை நடைமுறைப் படுத்தவும் உரிய அதிகாரங்கள் இலங்கையின் அடிப்படை சட்டவாக்கம் மூலமாக வழங்கப்படுதல் வேண்டும்.

இது சட்டமாக வரையறுக்கப்பட இன்று இயங்கிவரும் மக்கள் அமைப்புக்கள் மற்றும் மக்கள் இயக்கங்க



ளின் அழுத்தங்கள் அவசியம்.

இவ்வாறான அதிகாரங்கள் இல்லாத காரணத்தாலேயே மனித உரிமை மீறல்கள் தொடர்பான முறைப்பாட்டாளர்களின் தொகை அதிகரித்து வருகின்றது என்றார்.

அங்கு உரையாற்றிய மனித உ ிமைகள் ஆணைக்குழுவின் யா .அலுவலக இணைப்பதிகாரி றுவான் சந்திரசேகரா.

யாழ்.மாவட்டத்தில் அதிகளவில் மனித உரிமைகள் மீறல்கள் காணப்படுகின்ற போதும் அது தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அதிகார மற்றும் பொருளாதார வளங்களுக்கு மேலாக விசாரணை அதிகாரிகளின்பற்றாக்குறை காணப்படுகின்றது.

எனினும், மனித உரிமைகள் ஆணைக்குழு தன்கொள்கைகளுக்கு அமைவாக மக்களுக்குரிய சேவையை திருப்திகரமாக வழங்கி வருகின்றது என்றார். (உ-4)

### விவசாயக் குழுக் கூட்டம

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச விவசாயக் குழுக் கூட்டம் எதிர்வரும் 19ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30மணிக்கு உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. (உ-75)

### கூரை விரிப்பு

(தொல்புரம்)

அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக வலி மேற்கு பிரதேச செயலர் பிரிவில் வீடுகள் பாதிக்கப்பட்ட 150 குடும்பங்களுக்கு யு.என்.எச். சி.ஆர். நிறுவனம் அண்மையில் கூரை விரிப்புக்களை வழங்கியுள்ளது. (உ-70)


சங்குநாதம்

பாதுகாப்பு அமைச்சை ஒப்படைக்கத் தயார் ஆனால்...

யாழ்.நகரில் மீண்டும் டுமீல்... டுமீல்...

ஜனாதிபதியின் அடுத்த அதிரடி பாராளுமன்றக் கலைப்பா?

ஸ்ரீ.சு.கட்சி-ஜே.வி.பி கூட்டு மீண்டும் கருக்கட்டுகிறது

விலை ரூபா 14/-




ஆலடிமாநாடு

வியாசரின் பதில்கள்

கே.வி.குணசேகரம் எழுதும் கல் தூண்கள் தொடர்

மற்றும் பல அம்சங்களுடன்.....

வாசிக்கத் தவறாதீர்கள் திங்கள் வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது

சங்குநாதம்

## இன்று ஒரு தகவல்

# மீனும் பருந்தும்

ஒருகுளத்தங்கரை. அந்தக் குளத்தங்கரையோரமாக ஒரு ஆலமரம். அந்தப் பொய்கைக் கரையில் உட்கார்ந்து ஒருவர் தவம் செய்ய ஆரம்பித்தார். அந்த நேரம் பார்த்து அந்த ஆலமரத்திலிருந்து பழுத்த இலை ஒன்று கீழே விழுந்தது. அப்படி விழுந்த அந்த இலையின் ஒரு பாதி தண்ணீரிலும் மறுபாதி தரையிலும் கிடந்தது.

தண்ணீரில் விழுந்த ஒரு பாதி இலை மீனாக மாறியது. நிலத்தில் விழுந்த பாதி இலை பருந்தாக மாறியது. ஒரு மீன், ஒரு பருந்து. இரண்டும் ஒன்றையொன்று இழுக்க ஆரம்பித்து விட்டன. தவம் செய்யத் தொடங்கியவர் இதைக் கவனிக்க ஆரம்பித்து விட்டார். தவம் கலைந்து விட்டது. தவத்திலிருந்து தவறி விட்டார் என்ற குற்றத்திற்காக ஒரு பூதம் வந்து பிடித்துக் கொண்டு போய் ஒரு ஜெயிலில் தள்ளிவிட்டது.

அங்கே போய் பார்த்தால் ஏற்கனவே 999பேர் இருந்தார்கள். அனைவருமே இவரைப் போல் தவத்தில் தவறியவர்கள். எல்லோரையும் அந்தப் பூதம் பிடித்துக் கொண்டு போய் வைத்திருக்கிறது. அந்தப்பூதம் என்ன நினைத்துக் கொண்டு இருந்தது என்றால் 1000பேர் சேர்ந்ததும் ஒரேயடியாக சாப்பிட்டு விட நினைத்துக் கொண்டிருந்தது. அப்படித் தான் சொல்லிக் கொண்டே ஒவ்வொருவராகச் சேர்த்தது. கடைசியாக இவர் வந்து சேர்ந்ததும் எண்ணிக்கை 1000ஆகிவிட்டதல்லவா? அதனால் ஏற்கனவே அங்கிருந்த 999 பேருக்கும் இவர் மீது கோபம் வந்து விட்டது. இவரால் தானே அவர்களது உயிருக்கு ஆபத்து. இவர் ஒருவர் வரவில்லை என்றால் இப்போதைக்கு அந்தப் பூதம் அவர்களைச் சாப்பிடாதே! அதனால் எல்லோரும் சேர்ந்து இவரிடம் சண்டைக்கு வந்தனர். குற்றஞ் சாட்டினர்.

நீதான் எங்கள் அழிவுக்குக் காரணம் என்றார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலையில் கடைசியாக வந்த அவர் ஒரு நூல எழுதினார். அந்த நூல்தான் திருமுருகாற்றுப்படை. அவர் யார் தெரியுமா? நக்கீரர். அதாவது அந்தக் காலத்திலேயே ஜெயிலில் இருந்து புத்தகம் எழுதியவர் நக்கீரர். அவர் பாடிய பாட்டு அவருக்கும் விடுதலை வாங்கிக் கொடுத்தது. அவருடன் இருந்த ஏனையோருக்கும் விடுதலை வாங்கிக் கொடுத்தது.

இந்தக் கதை ஒரு புறம் இருக்கட்டும். இதன் கருத்தைக் கவனிப்போம். பொய்கைக்கரை தான் இந்த உலகம். பழுத்து விழுந்த இலைகள் தான் இங்குள்ள உயிர்கள். இலை வந்து குளத்தில் விழுந்தது போல் நாம் வந்து விழுந்துள்ளோம். இங்கே நாம் எப்படி வாழ வேண்டும் என்பதற்கு இரண்டு வழிகள் காட்டப்பட்டுள்ளன. மீன் போன்று வாழ்வதா? பருந்து போல் வாழ்வதா? மீன் எப்படி என்றால் தண்ணீரின் மேற்பரப்பில் நீந்தி விளையாடும். அங்கு கிடக்கும் அழுக்கை உண்டு வாழும். அப்படியே இறந்து போகும்.

பருந்து எப்படி என்றால் மிகுந்த உயரத்தில் பறக்கக் கூடிய வாழ்க்கை அதற்கு. வாழ்க்கை உயர்ந்ததுதான். இருந்தாலும் அதன் கண்கள் அழுகிப்போன பிணங்கள் ஏதாவது கிடைக்கின்றதா என்று தேடிக் கொண்டிருக்கும்.

மீனின் வாழ்க்கை உணர்ச்சி வசப்பட்ட வாழ்க்கை. அடித்தளம் வரை போய் வாழ்வின் உண்மையை அனுபவித்து தெரிந்து கொள்ளாமல் மேலெழுந்த வாரியாக சில அழுக்குப் போன்ற இச்சைகளை நிறைவு செய்து கொண்டு இறந்து போகும் வாழ்க்கை.

பருந்தின் வாழ்க்கை ஓர் அறிவு வாழ்க்கை. அறிவு மிகவுயரத்தில் பறக்கும். ஆனால் அதை ஆசை இழி நிலைக்குக் கொண்டு வந்து ஈடுபடுத்தி விடும். அறிவு உணர்ச்சியும் ஒன்றுக்கொன்று முரண்பட்டு இழுக்க அதனால் ஏற்படும் போர்கள் நிறைந்த போர்க்களம் தான் இந்த வாழ்க்கை.

இதுதான் நக்கீரரின் தவம் குலைந்த நிகழ்ச்சியின் கருப்பொருள். இந்தக் கருப்பொருள் நமக்கு உணர்த்தும் நீதி ஒன்று உண்டு. மீனும் பருந்தும் இணைந்த ஒருவகை வாழ்க்கை முறை நமக்கும் தேவை. உலகம் என்கின்ற பொய்கையில் வாழ வேண்டும் என்றால் நமக்கு நீந்தத் தெரிந்திருக்க வேண்டும்.

உலகிலிருந்து ஒதுங்கி வாழாமல் தனக்கென்று எதுவிதப் பற்றும் இல்லாமல் எதிலும் தோய்ந்து நின்று, முகர்தல் இல் லாமல் நீரின் மேற்பரப்பிலேயே நீந்தி வாழும மீன் போல் இந்த உலக வாழ்வை நாம் அமைக்க வேண்டும்.

ஆனால் அதே சமயத்தில் பருந்து வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும். பருந்தின் வாழ்க்கை ஒருவகை. யோக வாழ்க்கை. உடல் வாழ்க்கையில் மீனாகவும், உயிர் வாழ்க்கையில் பருந்தாகவும் இருக்கின்ற மாதிரி நமது வாழ்வை நாம் அமைத்துக் கொள்ள வேண்டும்.

இது இருக்கட்டும். நக்கீரர் ஜெயிலில் புத்தகம் எழுதினார் அல்லவா? நமது ஆள் ஒருவர் சமீபத்தில் ஜெயிலில் இருந்து வெளியில் வந்தார். ''என்ன சார்... ஜெயிலில் இருந்த போது ஏதாவது புத்தகம் எழுதினீர்களா?'' என்று கேட்டேன். ''எழுதினேன் சார்... அதன் பின் தான் வெறும் காவல் தண்டனையில் இருந்து கடும் காவல் தண்டனையை அனுபவிகக வேண்டியதாகிவிட்டது'' என்றார். ''என்ன புத்தகம் எழுதினீர்கள்?'' என்றேன். ''ஜெயிலில் இருந்து எப்படித் தப்புவது? என்பது தான் புத்தகத்தின் தலைப்பு சார்'' என்றார்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# யாழ். மாவட்டத்தில் மாதாந்தம் 28சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள்

(சுதுமலை)

யாழ். மாவட்டத்தில் மாதாந்தம் 28 வரையான சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றனவென்று யாழ். போதனா வைத்தியசாலையின் சிறுவர் பாதுகாப்பு நிதிய வைத்திய அதிகாரி டாக்டர் சுரேந்திரகுமாா தெரிவித்துள்ளார்.

அண்மையில் சங்கானையில் இடம்பெற்ற சிறுவர் துஷ்பிரயோகம் குறித்த விழிப்புணர்வுப் பிரசார நிகழ்வில் கலந்து கொண்டு பேசுகையில் இவ்வாறு தெரிவித்த அவா மேலும் கூறுகையில்,

மாதாந்தம் 28 வரையான சிறுவர் துஷ்பிரயோகங்கள் குறித்த தகவல்கள் எமக்குக் கிடைக்கின்றனவாயினும், இத் தொகை அதை விடக் கூடுதலாக இருக்கலாம் என நம்பப்படுகிறது.

சிறுவர் துஷ்பிரயோகங்கள் குறித்த பல தகவல்கள் எமக்குக் கிடைப்பதில்லை. சமூகப் பார்வை, குடும்ப அந்தஸ்து இவற்றைக் கருத்தில் கொண்டு இவ்வாறான பல சம்பவங்கள் வெளிப்படுத்தப்படுவதில்லை.

சிறுவர் பாதுகாப்பு நிதியச் செயற்பாடுகள் நாட்டின் பல பாகங்களிலும் முழு அளவில் முனனெடுக்கப்படுகின்றனவாயினும், யாழ். மாவட்டம் இதில் முன்னணியில் திகழ்கின்றது.

யுனிசெவ் அமைப்பின் அனுசரணையோடு சிறுவர் நலன் பேணல் செயற்பாடுகள் யாழ். மாவட்டத்தில் சிறப்பாகச் செயற்படுத்தப்படுகின்றன.

அடுத்த வருடம் முதல் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு தோறும் உள்ள வெளிக்கள உத்தியோகத்தர்களின் உதவியுடன் கிராம மட்டங்களில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகள், நலன்புரித்திட்டங்கள் என்பன நடைமுறைப்படுத்தப்படவுள்ளன என்று குறிப்பிட்டார்.

(உ-252)

# முஸ்லிம் காங்கிரஸ் கட்சியுடன் இணைய முன்னாள் பா. உக்கள் இணக்கம்

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பகுதிகளை பிரதிநிதித்துவம் செய்த முன்னாள் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியுடன் இணைந்து கூட்டாகச் செயற்படுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

வடக்கு- கிழக்குப் பகுதிகளில் வாழும் முஸ்லிம் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் அவர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கும் ஏதுவாகவே அவர்கள் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினாகள் கூட்டாக இணைந்து, அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ் கட்சியின் தலைவருமான ரவூப் ஹக்கீமை சந்தித்தபோது இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இச்சந்திப்பின்போது வடக்கு-கிழக்குப் பகுதிகளில் முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்டுவரும் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டன.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் இந்தக் கூட்டத்தில் உரையாற்றும் போது, நாட்டின் எந்தப்பகுதிகளிலும் வாழும் முஸ்லிம் மக்களினதும் பாதுகாப்பை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுமே பாதுகாக்க வேண்டும். அது அவர்களின் பொறுப்பாகும்.

இவ்விரு தலைவர்களும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் உதவியுடனேயே மக்களின் ஆணையைப்பெற்றனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(தி-61)

## இராசி பலன்

**14.12. 2003**

**(கார்த்திகை 28,ஞாயிறு)**

**பஞ்சமி மு.ப.8.29 வரை**

**ஆயிலியம் பி.ப.12.50 வரை**

**இராகுகாலம் 4.51-6.21**

**சுபநேரம் 9.21-10.51**

**ஆறுமுகநாவலர் குருபூசை**

**மேடம்**
அஜீரணக் கோளாறு, கற்பணை மிகுதி,காரியதாமதம், பணத் தட்டுப்பாடு.

**இடபம்**
மனச்சஞ்சலம்,தெய்வசிந்தை, காரிய தாமதம், தனவிரயம்.

**மிதுனம்**
நற்கீர்த்தி,எதிர்பாராத நன்மை, குடும்ப சுகம்,எடுத்தகாரியம் கைகூடும்.

**கடகம்**
மனோசங்கடம்,கௌரவக் குறைவு, புதியமுயற்சி,உறவினர் சந்திப்பு.

**சிங்கம்**
வெகுமானம்,தெய்வசிந்தை,நல்ல முயற்சி,போசன நன்மை.

**கன்னி**
நித்திரைக் குறைவு,காரிய அலைச்சல்,சுபசெலவு,மனச்சோர்வு.

**துலாம்**
ஆனந்தம்,தனதானிய சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு,காரிய அனுக்கூலம்.

**விருச்சிகம்**
அதிக பிரயாசை,ஆரோக்கியம், பிரபுத்தனம், போசனசுகம்.

**தனுசு**
எதிர்பாராத செலவு,வயிற்றுக் கோளாறு, சரீரப் பிரயாசை, காரியதாமதம்.

**மகரம்**
முழங்கால் வலி,பொருள் விரயம், மனக்கவலை,காரிய தடங்கல்.

**கும்பம்**
தேகசௌக்கியம், பிரயாண நன்மை, கீர்த்தி, முயற்சி கைகூடும்.

**மீனம்**
நோய் குணமடைதல், காரிய சித்தி,பொருள் சேர்க்கை,தொழில் சிந்தை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

**- வளவன்.**

# இலங்கை-ஸ்பானிய செ. சங்கங்கள் இணைந்து கிளி.மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு பல்வேறு உதவிகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு விவசாய உற்பத்திப் பொருட்கள், உலர் உணவுப்பொருட்கள் மற்றும் உணவுப்பொருள் அல்லாத உதவு பொருட்கள் என்பனவற்றை இலஙகை செஞ்சிலுவைச் சங்கமும் ஸ்பானிய செஞ்சிலுவைச் சங்கமும் இணைந்து வழங்கி வருகின்றன.

உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் அனுசரணையுடன், கிளிநொச்சியில் உள்ள செஞ்சிலுவைச் சங்கக்கிளை அலுவலகத்தின் ஊடாகவே இவ் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கிருஷ்ணபுரம் கிராமத்தில் 60 குடும்பங்களுக்கும் விநாயகபுரத்தில் 20 குடும்பங்களும் உருத்திரபுரம் வடக்கு கிராமத்தில் 147 குடும்பங்களுக்கும் உருத்திரபுரம் கிழக்கு கிராமத்தில் 34 குடும்பங்களுக்கும் பெரிய பரந்தன் கிராமத்தில் 130 குடும்பங்களுக்கும் பரந்தன் குமரபுரம் கிராமத்தில் 63 குடும்பங்களுக்கும் உமையாள்புரம் கிராமத்தில் 31 குடும்பங்களுக்கும் ஊரியான் கிராமத்தில் 30 குடும்பங்களுக்கும் பன்வில் கிராமத்தில் 122 கிராமங்களுக்கும் பச்சிலைப்பள்ளி பளைப் பிரதேசத்தில் உள்ள கோவில் வயல் கிராமத்தில் 73 குடும்பங்களுக்குமே மேற்படி உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. (உ-64,10)

# திருவாவடுதுறை கிராம திறப்பு விழா இன்று

(காரைநகர்)

இந்து கலாசார அமைச்சின் நிதி உதவியுடன் கல்லுண்டாயில் அமைக்கப்பட்டுவரும் ''திருவாவடுதுறை கிராமம்'' இன்று வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

இன்று யாழ்ப்பாணம் வருகைதரவுள்ள திருவாவடுதுறை ஆதீன 23வது குருமஹா சன்னிதானம் சீர் வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள், இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனின் தேண்டுதலின் பேரில் இக் கிராமத்தைத் திறந்து வைக்கவுள்ளார்.

அத்துடன், இவ் வீட்டுத் திட்டத்தில் பூரணப்படுத்தப்பட்ட 4 வீடுகளை இன்றைய தினம் இந்து கலாசார அமைச்சர் உத்தியோக பூர்வமாக உரியவர்களிடம் கையளிக்கவுள்ளார்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசசாரிய சுவாமிகள், யாழ். மாவட்ட கமநல சேவை உதவி ஆணையாளர் எஸ். சுந்தரேசன், பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் பொ. சிவபாதம் உள்ளிட்ட பிரமுகர்கள் பலர் இந் நிகழ்வில் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (உ-246)

# கற்கோவளம் பகுதியில் 100 மிதிவெடிகள் மீட்பு


(தும்பளை)

வடமராட்சியின் கற்கோவளம் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வந்த மிதிவெடி அகற்றும் பணியின் போது மீட்கப்பட்ட மிதிவெடிகள் நேற்றைய தினம் செயலிழக்கச் செய்யப்படவிருந்தன.

மேற்படி பகுதியில் குடிமனைகளை ஊடறுத்து அமைக்கப்பட்டு படையினரால் கைவிடப்பட்ட அரணை அண்டிய பிரதேசத்தில் கடந்த மாதம் 21ஆம்திகதி முதல் டெனிஷ் கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் மிதிவெடிகளை அகற்றி வந்தனர்.


நேற்று முன்தினம் வரையான 21 தினங்கள் இடம்பெற்ற இம் மிதிவெடி அகற்றும் பணியில் மீட்கப்பட்ட 100 மிதிவெடிகளே இவ்வாறு செயலிழக்கச் செய்யப்படவிருந்தன.

இதேவேளை, இப்பகுதியில் இடைநிறுத்தப்பட்டுள்ள மிதிவெடி அகற்றும் பணிகள் மீண்டும் ஜனவரி மாதம் 5ஆம்திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன. (உ-24)



# ஈழத்துச் சிதம்பரம் அ

## திறப்புவிழா சிறப்பு ம



### நல்லை ஆதீன முதல்வரின்
## அருளாசிச் செய்தி

சிவநேயச் செல்வர்காள்!

ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் தங்க ஷேத்திரத்தில் புதிதாக அமைக்கப்பட்ட அறப்பணி நிலையம் இன்று திறந்துவைக்கப்படுவதையிட்டு பேருவகை அடைகின்றோம்.

சிவபூமியென்று திருமூலரால் புகழப்பட்ட நம்நாட்டிற்குக் காரைநகர் ஈழத்துச் சிதம்ரம் மேலும் பெருமை தேடித் தருகிறது.

வரலாற்றுப் பெருமை மிக்க இச் சிவாலயத்தின்கண் அறப்பணி நிலையம் அமைக்கப்பட்டிருப்பது பாராட்டிற்குரியது மட்டுமல்ல.

இம்முயற்சி கண்டு ஏனைய ஆலயங்களும் தங்கள் அறப்பணியை மேற்கொள்ள இது சாலவும் துணை புரியும் என நம்பலாம்.

அவ்வகையில் இன்றைய நன்நாளில் திறந்து வைக்கப்படும் அறப்பணி நிலையத்தினூடாகத் தர்ம காரியங்கள் செழித்தோங்க எல்லாம்வல்ல பார்வதி பரமேஸ்வரனை வேண்டி ஆசி கூறுகின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

*ஆதீன முதல்வர்,*
*நல்லை ஆதீனம், நல்லூர்.*

**ஸ்ரீலஸ்ரீ தேசிக சுந்தர ஞானதேசிக பரமாசார்ய சுவாமிகள்.**

---

### சர்வதேச இந்துமத குருபீடாதிபதியின்
## ஆசிச்செய்தி



காரைநர் ஈழத்துச் சிதம்பரத்தில் அறப்பணி நிலையம் அமைக்கப்பட்டு இன்று அந்நிலையம் திறந்துவைக்கப்படுவதையிட்டு மட்டற்ற மகிழ்வடைகின்றேன்.

'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்ற மகுட வாசகத்தின் சொந்தக்காரர்களாகிய நாம் சைவமும், தமிழும் தளைத்தோங்க அறப்பணிகள் ஆற்றுவது காலத்தின் கட்டாய தேவையாகும்.

'அன்பர் பணிசெய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்ப நிலை தானே வந்தெய்தும் பராபரமே'

என்பது தாயுமான சுவாமிகள் கண்ட உண்மை. அவரின் வாக்கு அடியார்க்கு உதவும் அறப்பணியைக் குறிப்பதாகும்.

இதனை உணர்ந்து இந்து கலாசார அமைச்சு காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் அறப்பணி நிலையத்தை அமைத்திருப்பது சாலவும் சிறப்புடையதாகும். இந்நிலையத்தின் பணி பரவ நல்லாசிகள்.

**சிவஸ்ரீ ச.மகேஸ்வரக் குருக்கள்**
**பீடாதிபதி**

*சர்வதேச இந்துமத குருபீடம்*

---

### சிவத்தமிழ் அன்னையின்
## வாழ்த்துச் செய்தி



கலாநிதி செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி
சமாதான நீதிபதி

ஈழத்துச் சிதம்பரம் அறப்பணி மண்டபம் திருவாவடுதுறை ஆதீனம் குருமகாசந்நிதானம் சுவாமிகள் அவர்களால் இன்று திறக்கப்பட இருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். எனக்கு ''சிவத்தமிழ்ச் செல்வி'' என்னும் விருதினைத் தந்த பெருமை ஈழத்துச் சிதம்பரத்துக்கே உரியது. இன்று திறக்கப்படவுள்ள ''அறப்பணி நிலையம்'' பல்வேறு அறப்பணிகளை ஆற்றி தொண்டாற்ற எல்லாம் வல்ல துர்க்கை அம்பாளைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

*தலைவர்,*
*ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்,*
*தெல்லிப்பழை.*

---



## ஈழத்துச் சிதம்பர சைவ அறப்பணி நி
## 2வது உலக இந்து மாநாட்டின் ஞாபகச்

சைவமும் தமிழும் சிறப்புற்று விளங்கும் காரைநகரில் ஈழத்துச் சிதம்பர ஆலயத்திற்கு அருகா
நிலையம் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது. இரண்டாவது உலக இந்து மாநாட்டின் ஞாபகார்த்தமாக இ
நிதி ஒதுக்கீட்டில் காரைநகர் இந்துமாமன்றத்தினால் இவ் அறப்பணி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

அறப்பணி நிலையம் அமைப்பதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு 2003ஆம் ஆண்டு யூலை மாதம்
இதற்கான அடிக்கல்லை ஈழத்துச் சிதம்பர ஆதீனகர்த்தாக்கள் நாட்டிவைத்தனர்.

காரைநகர் இந்து இளைஞர் மன்ற இளைஞர்களின் அயராத உழைப்பினாலும் இந்து கலாசா
தியாகராசா மகேஸ்வரன் அவர்களின் நேரடி வழிநடத்தலாலும் மேற்படி அறப்பணி நிலையக் கட்டடம் மிக
செய்யப்பெற்றது. இவ் அறப்பணி நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள அலங்கார மண்டபங்கள். நுழைவாயி
பெருமான் சபை என்பன சுழிபுரம் பறாளாய் சி.பாலகுமாரசர்மா அவர்களினால் மிகவும் சிறப்பாக வடிவமை
அமைப்பு இந்து மதத்திற்கும் கலை கலாசாரத்திற்கும் உள்ள நெருக்கமான தொடர்பை சிறப்பாக எடுத்துச்

இவ்வாறு பல சிறப்புக்களைப் பெற்ற அறப்பணி நிலையத்தினூடாகப் பல வ
மேற்கொள்ளப்படவுள்ளது. வறிய பாடசாலை மாணவர்களிற்கான புலமைப் பரிசில் திட்டம். அறநெறிப் பா
நிலையம். யாத்திரிகர் தங்கும் இடம். அன்னதானம் மற்றும் குருமார் பயிற்சிக் கல்லூரி. நூல் நிலை
அமையப்பெற்றுள்ளது.

இவ்வாறான பல அறப்பணிகளையும் முன்னெடுத்துச் செல்லவுள்ள இவ் ஈழத்துச் சிதம்பர சை
திறப்புவிழாவிற்கு எமது கௌரவ இந்து கலாசார அமைச்சரின் அழைப்பை ஏற்று திருக்கைலாய பரம்பரைத் தி
23ஆவது குருமஹா சந்நிதானம் சீர் வளர் சீர்சிவப்பிரகாச
சுவாமிகள் நேரடியாக வருகை தந்து ஆசி வழங்குவது எம
மட்டற்ற பக்திப் பரவசத்தையளிக்கின்றது. அவர்களுடன் ந
குருமகா சந்நிதானம். ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ...ாச்சாரிய சுவாமி
அப்பாக்குட்டி.. கலாநிதி சிவஸ்ரீ க.வைத்தீஸ் ...வரக் குருக்கள் என
வாழ்த்துரை வழங்கவுள்ளமை சிறப்பானதாகும்.
இங்ஙனம் அரிய பல சிறப்புக்களையும் பொருந்திய சைவ
திறப்பு விழாவினூடாக எமது அமைச்சர் இந்நாமயத்தின்பால்
அதனூடாக எமது ஊர் மக்கள் மீது கொண்டுள்ள அன்பினையும் அறிய முடிகின்றது. மேற்படி பல அறப்
வழிசமைத்துத் தந்த எமது கௌரவ அமைச்சர் தி.மகேஸ்வரனை வாழ்த்திப் பாராட்டுவதோடு. இவ் அறப்
சிறப்பாக அமைய வேண்டும் என ஈழத்துச் சிதம்பரத்தானின் பாதாரவிந்தம் பணிந்து நிற்கின்றோம்.

**ந.சிவபரன்**
*தலைவர்,*
*இந்து இளைஞர் மன்றம்,*
*காரைநகர்,*


**S.S. ENTERPRISES**
Transporters & General Merchants
எஸ்.எஸ் என்டபிரைசஸ்
220, Keyzer Street, Colombo - 11. Tel: 433679, 336186 Fax: 336186
321, Navalar Road, Jaffna. Tel: 021-222 3509 Fax: 021-222 3214

**சிறி முருகன் தொலைத்தொடர்பகம்**
303, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

**...ரூபா பன்முக வர்த்தகம்**
104A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**S.V. முருகேசு**
154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**சு...**
316...

**ஈஸ்வரன் ரேடேர்ஸ்**
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**சிற்றி ஹாட்வெயர் அன் ஸ்ரோர்ஸ்**
55,57, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**வெங்கடேஸ்வரா**
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**மகாலஷ்மி ஸ்ரோர்ஸ்**
212, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**...வா...**
80/8...

## சிறுவிளம்பரம்

### திருத்துதலும் ஒட்டுதலும்

மூக்குக்கண்ணாடி ஒட்டுதல், சகல கெமரா வகைகளும் எலெக்ரோனிக் பிளாஸ்கன் திருத்துதல், சிறிய பிளாஸ்ரிக் பாட்ஸ் ஒட்டு தலுக்கு. தொடர்பு:- சு.நாராயணசாமி இல. 301 கஸ்தூரியார் வீதி, (மேல் மாடி) கன்னாதிட்டிச் சந்திக்கருகில் மீண்டும் இயங்குகின்றது. (8005)

### MATHS

ஆண்டு 6லிருந்து O.L வரை கணித பாடத்தின் பெரும்பிரிவுகளான அட்சர கணிதம், கேத்திர கணிதம், எண் கணிதம், புதிய கணிதம் ஆகியவற்றின் சகல அலகுகளையும் ஆரம்ப அறிவிலிருந்து குறைந்த காலத்தில் A, B பெறுபேறடைவதற்குக் கற்பிக்கப்படும். சந்திக்கும் நேரம் காலை 8.00 - 9.00 க.ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (8025)


# பிரதமர்-ஜனாதிபதி இணக்கப்பாடு சாத்தியப்படாத சமாசாரம்

## அரசியல் அவதானிகள் கருத்து

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும் இடையிலான இணக்கப்பாட்டு முயற்சிகள் திட்டமிட்டபடி நாளை திங்கட்கிழமைக்குள் வெற்றி பெறுமா? என்பது சாத்தியப்படாத விடயமாகவே இருப்பதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இரு தரப்பினரும் விதித்திருந்த காலக்கெடு நெருங்கிவரும் நிலையில் கடந்த புதன்கிழமை ஜனாதிபதிக்கும்-பிரதமருக்குமிடையில் நடைபெற்ற சந்திப்பில் தீர்க்கமான முடிவுகளை எடுப்பார்கள் என பலரும் எதிர்பார்ப்பு வெளியிட்டிருந்தனர்.

ஆனால், இந்த எதிர்பார்ப்பு முடிவுகள் எட்டப்படாத இந்தச் சந்திப்பால் தோல்வி கண்டது. அத்துடன், ஜனாதிபதியினால் முன்வைக்கப்பட்டுள்ள தேசிய பாதுகாப்பு அமைச்சு தொடர்பான யோசனைகளையும் பிரதமர் கடந்த வியாழக்கிழமை நிராகரித்து விட்டார். இரு தரப்பினருக்குமிடையில் இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்துவதற்கு இன்னும் நீண்டதூரம் பயணிக்க வேண்டியிருக்கிறது என்பதையே இவை கோடிகாட்டி நிற்கின்றன.

இதேவேளை, நாளை திங்கட்கிழமைக்குள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்குமிடையில் திடீரென சந்திப்பொன்று இடம்பெறலாம் என கடந்த வியாழக்கிழமை கொழும்பில் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில் அமைச்சரவைப்பேச்சாளர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்திருந்தமை இங்கு குறிப் பிடத்தக்கது.

(உ-63,10)

## மீளக்குடியமர்ந்த மக்களுக்கு

# இரண்டாம் கட்டமாக வீட்டுப் பாவனைப் பொருட்கள்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கில் உள்ள மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் மீளக்குடியமர்ந்த மக்களுக்கு யு.என்.எச். சி.ஆர் நிறுவனம் இரண்டாம் கட்டமாக வீட்டுப் பாவனைப்பொருட்களை வழங்கவுள்ளது.

இந்த வகையில் எதிர்வரும் 16ஆம்திகதி செவ்வாய்க்கிழமை வெற்றிலைக்கேணி, போக்கறுப்பு, முள்ளியான் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் 17ஆம்திகதி புதன்கிழமை உடுத்துறை, ஆழியவளை ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் 18ஆம் திகதி வியாழக்கிழமை செம்பியன்பற்று வடக்கு,தெற்கு, வத்திராயன், மருதங்கேணி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் வீட்டுப்பாவனைப் பொருட்கள் வழங்கப்படவுள்ளன.

(உ-35)

# ஸ்ரீ.சு.கட்சி போல் ஐ.தே.கட்சி சின்னம் இன்றி செயற்படாது

## அமைச்சர் மொகமட் தெரிவிப்பு

(கொழும்பு)

சில அரசியல் கட்சிகளுடன் இணைந்து செயற்பட ஐக்கிய தேசியக் கட்சி விரும்புகின்ற போதிலும் அக்கட்சிகளின் கொள்கைகளுக்கும் கோட்பாடுகளுக்கும் அமைய ஐக்கிய தேசியக் கட்சி ஒரு போதும் செயற்படாது என மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் எம்.எச். மொகமட் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் 49ஆவது வருடாந்த சம்மேளனக் கூட்டம் கொழும்பு சுகததாஸ உள்ளக அரங்கில் நேற்று நடைபெற்றது.

இக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் பேசிய அமைச்சர், தற்போது பாராளுமன்றத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் உறுப்பினர்கள் எவரும் இல்லை. அத்துடன் அந்தக் கட்சியின் கைச்சின்னம் நீக்கப்பட்டு பொது ஜன ஐக்கியமுன்னணி என்ற பெயரிலேயே அக்கட்சியினர் செயற்படுகின்றனர்.

இவவாறான சூழல் ஐக்கிய தேசிய கட்சிக்கும் அதன் யானைச் சின்னத்திற்கும் ஏற்படக்கூடாது. கட்சியைப் பாதுகாத்துக் கொள்ள அனைத்து உறுப்பினர்களும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

அப்போது தான் எதிர்க்கட்சிகளின் அவதூறான பேச்சுக்களில்

# மீள் குடியமர்த்துகைப் பணியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

(கிளிநொச்சி)



இணைந்து செயற்பட ஐக்கிய தேசியக் கட்சி விரும்புகின்ற போதிலும் அக்கட்சிகளின் கொள்கைகளுக்கும் கோட்பாடுகளுக்கும் அமைய ஐக்கிய தேசியக் கட்சி ஒரு போதும் செயற்படாது என மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் எம்.எச்.

49ஆவது வருடாந்த சம்மேளனக் கூட்டம் கொழும்பு சுகததாஸ உள்ளக அரங்கில் நேற்று நடைபெற்றது.


இக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் பேசிய

கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் உறுப்பினர்கள் எவரும் இல்லை. அத்துடன் அந்தக் கட்சியின் கைச்சின்னம் நீக்கப்பட்டு பொது ஜன ஐக்கியமுன்னணி என்ற பெயரிலேயே அக்கட்சியினர் செயற்படுகின்றனர்.

இவ்வாறான சூழல் ஐக்கிய தேசிய கட்சிக்கும் அதன் யானைச் சின்னத்திற்கும் ஏற்படக்கூடாது. கட்சியைப் பாதுகாத்துக் கொள்ள அனைத்து உறுப்பினர்களும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

அப்போது தான் எதிர்க்கட்சிகளின் அவதூறான பேச்சுக்களில் இருந்தும் செயற்பாடுகளில் இருந்தும்கட்சியைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி-61)





யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நேற்று நடைபெற்ற சர்வதேச மனித உரிமைகள் தின நிகழ்வை யாழ். உயர் நீதிமன்ற நீதவான் சி. வரதராஜா சுடர் ஏற்றி ஆரம்பித்திது வைப்பதையும், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயலாளர் கேமா விக்கிரமநாயக்க உள்ளிட்ட பிரமுகர்கள் மேடையில் வீற்றிருப்பதையும் படங்களில் காணலாம்.

# மீள் குடியமர்த்துகைப் பணியில்

# தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

(கிளிநொச்சி)

திருகோணமலை கன்னியாய் கிராமத்தில் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கையில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஈடுபட்டு வருகிறது.

1983, 1987ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட கொலை மற்றும் போர் நடவடிக்கைகள் காரணமாக மேற்படி கிராமத்தில் உள்ள தமிழ் மக்கள் இடம் பெயர்ந்து வேறு மாவட்டங்களில் வசித்து வருகின்றனர்.

அத்துடன்,1990ஆம் ஆண்டில் கன்னியாய் கிராமத்திற்கு அண்மையில் உள்ள கிளிக்குஞ்சு மலைத் தொடர் பிரதேசத்தில் படையினர் நிலை கொண்டிருந்தனர்.

இதன் காரணமாக, இக்கிராமம் மக்கள் பாவனையின்றி பெருமளவு மிதிவெடிகள் புதைக்கப்பட்ட பிரதேசமாக காணப்பட்டது.

தற்போது ஏற்பட்டுள்ள அமைதிச் சூழ்நிலையினையடுத்து இக் கிராமத்தில் மக்களை மீளக்குடியமர்த்தும் நடவடிக்கையில் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் ஈடுபட்டு வருகின்றது.

இதன் ஆரம்பகட்ட நடவடிக்கைக்காக ''நிக்கொட்'' நிறுவனம் 4 இலட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

அத்துடன், மேற்படி கிராமத்தில் உள்ள மிதிவெடிகளை அகற்றும் நடவடிக்கைக்கு டெனிஷ் கண்ணி வெடி அகற்றும் நிறுவனம் உதவ முன்வந்துள்ளது. (உ-64,10)

### ஈழத்துச் சிதம்பரத்தில் இந்தியக் கலைஞர்களின் இன்னிசைக் கச்சேரி

(யாழ்ப்பாணம்)

காரைநகர் ஈழத்துச் சிதம் பரத்தில் திருவெண்பா உற்சவ 7ஆம் திரு விழாவன்றும் திருவா திரை உற் சவத்தன்றும் தமிழகத் தின் புகழ் பூத்த நாதஸ்வர தவில் வித்துவான் களின் இன்னிசைக் கச்சேரி இடம் பெறவுள்ளது.

நாதஸ்வர மேதைகளான மன்னார் குடி சங்கரநாராயணன் சகோதரர்கள்,தவில் மேதைகளான மன்னார் குடி வாசுதேவன்,திருக்கடவூர் பாபு இணைந்து இந்த இசைக் கச்சேரிசை நிகழ்த்தவுள்ளனர். (உ)


## யாழ். மாவட்ட துரித அபிவிருத்தி திட்டம்-2004
## திட்ட ஆலோசனைகளைப் பெறுதல்

இடம் பெயர்ந்த ,மீளக்குடியமர்ந்த மக்களது அவசிய தேவைகளை இனம் காணுதல், அவற்றை ஈடுசெய்வதன் மூலம் அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கான துரித அபிவிருத்தித்திட்டமொன்றைத் தயாரித்து அதனை 2004ஆம் ஆண்டில் அமுல் நடத்த நடவடிக்கை எடுக்குமாறு கௌரவ பிரதம அமைச்சர் எம்மை பணித்துள்ளார். இதற்கான தேவைகளை இனங்காணுவதற்கு சமூக நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்களது முன்மொழிவுகளைப் பெறுமாறும் பணிக்கப்பட்டுள்ளது.

எனவே, இத்திட்டத்தை தயாரிப்பதற்கான, யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த சகல சமூக நிறுவனங்களும் அவ்வப் பிரதேச மக்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் அவர்களது உடனடி கஷ்ட நிலையை நீக்குவதற்குமான, செயல் திட்ட ஆலோசனைகளை 25.12.2003றகு முன்னர் எனக்கு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**செ.பத்மநாதன்**
மாவட்ட செயலாளரும்/ அரசாங்க அதிபரும்

(சி/6989)



## மீனா பாடசாலையில் இருந்து விலகுவாளா?

வீட்டிலுள்ள பிரச்சினையை மீனா ஆசிரியைக்கு கூறுகின்றாள். ஆசிரியையின் உதவியுடன் மீனாவின் தாய் வங்கியில் கடன் வாங்கி பசு மாடு ஒன்றை வாங்குகின்றார். லலி என்ற பெயருடைய அப் பசுவின் பாலை விற்று கடைக்காரனின் கடனைக் கொடுக்க அவர்கள் ஆரம்பிக்கிறார்கள்.

வீட்டில் நிலைமை சிறிதளவு திருந்தி வருகையில் திடீரென தன் கடன் முழுவதையும் திரும்பக்கொடுக்குமாறு கூறுகிறார். அன்று பொழுதுபடுவதற்குள் கடனைக் கொடுக்காவிட்டால் லலியைக்கொண்டு போகப்போவதாக அவர் பயமுறுத்துகிறார். தந்தைக்கு சுகமில்லை. தாய் குழந்தையைப் பார்த்தல் வேண்டும். கடன் கொடுக்கும் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பொறுப்பு மீனாவுக்கும் அவளின் தம்பி ராஜு" வுக்கும் வருகிறது. தந்தையின் சைக்கிளில் அவர்களின் பாற்கடைக்குப் போகிறார்கள். அது மிகவும் தொலைவில் உள்ளது. அங்கு பணம் பெற்றுக்கொண்டு வீடுதிரும்பும் சமயம் கடைக் காரன் லலயைக்கொண்டு போவதற்கு வந்து விட்டார். கடைக்காரர் மாட்டை அவிழ்ப்பதற்கு முன் மீனாவின் கிளி மிது பணப் பையுடன் பறந்து வருகிறது. கடன் திரும்பக் கட்டப்பட்டு விட்டதால் கடைக்காரன் ஏமாற்றத்துடன் திரும்புகிறான்.



உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:-
**மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு**
**அறை எண் – 30,**
**யாழ். போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்**

unicef (C/6946)

# இலங்கை அசியலில் நெருக்கடி மிகுந்துள்ள இந்தத் தருணத்தில்

# இந்தியா மௌனம் சாதிப்பது பிராந்திய நலன்களைப் பாதிக்கும்

## தேசாபிமான இயக்கம் இந்திய அரசுக்கு மகஜர்

(கொழும்பு)

**இணைக்கப்பட்டுள்ள வடக்கு-கிழக்கு மாகாணத்தை பிரிப்பதற்கு இந்தியா தனது முழு அதிகாரத்தையும் பயன்படுத்த வேண்டும் என தேசாபிமான தேசிய இயக்கத்தின் பிரதிநிதிகள் இந்திய அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபம்சென்னை கடந்த வியாழக்கிழமை கொழும்பில் சந்தித்த தேசாபிமான தேசிய இயக்கப் பிரதிநிதிகள் இலங்கையின் தற்போதைய அரசியல் நெருக்கடி நிலையில் இந்தியா எவ்வாறு செயற்படவேண்டும் என்பது குறித்த மகஜர் ஒன்றை அவரிடம் கையளித்த போதே இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.**

தேசாபிமான தேசிய இயக்கப் பிரதிநிதிகள் இந்திய தூதுவர் நிருபம் சென்னிடம் கையளித்த மகஜரில்,

தமிழீழ விடுதலைப்புலிகள் வடக்கு- கிழக்கு மாகாணத்துக்கு இடைக்கால நிர்வாக சபையொன்றை வழங்க வேண்டும் என இலங்கை அரசாங்கத்திடம் கோரிவருகின்றனர்.

அது தொடர்பான யோசனைகளையும் அரசாங்கத்திடம் அண்மையில் சமர்ப்பித்துள்ளனர். அதனை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் இந்த இடைக்கால நிர்வாகம் பற்றிய யோசனைகள் சமஷ்டி அரசாங்கத்திற்கு அமைவாக இல்லாமல் தனித் தமிழ் ஈழத்திற்கான வரைபாகவே உள்ளது.

அவ்வாறு அவர்களின் யோசனைகளுக்கமைய அரசு வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கு இடைக்கால நிர்வாகத்தை வழங்கினால் நாடு இரண்டாக பிளவுபட்டுவிடும். விடுதலைப் புலிகள் இடைக்கால நிர்வாகத்தைப் பயன்படுத்தி தனித் தமிழீழத்தை உருவாக்கி விடுவார்கள்.

அத்தகைய தனித் தமிழீழம் ஒன்றை அவர்கள் அமைக்கும் பட்சத்தில் அதன் பாதிப்புக்கள் இந்தியாவிற்கும் இருக்கும்.

எனவே, வடக்கு-கிழக்கு மாகாணத்தை இணைப்புச் செய்தமைக்கு முழுக்காரணமாக இருந்த இந்தியா, அதனை பிரிப்பதற்கும் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இலங்கையில் தற்போது எழுந்துள்ள அரசியல் நெருக்கடிக்கு முக்கிய காரணம் வடக்கு-கிழக்கு மாகாணத்திற்கான இடைக்கால நிர்வாகப் பிரச்சினையே என்பதை இந்தியா புரிந்து கொள்ளவேண்டும். இலங்கையில் நிலவும் அரசியல் நெருக்கடிகளில் தலையிடாது இந்தியா தப்பித்துவிடுவது பொருந்தமானதாகத் தோனறவில்லை என்பதையும் இங்கு கூறி வைக்கவிரும்புகிறோம்.

இலங்கையில் சர்வதேச நாடுகளின் தலையீடுகள் அதிகரித்துவரும் நிலையில், இந்தியா மட்டும் விலகிக் கொண்டு மௌனம் சாதிப்பது விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளுக்கு சாதகமாக அமைந்துவிடும் என்று அந்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இச்சந்திப்பில் ஜே.வி.பி.யின் பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச வணக்கத்துக்குரிய எல்.ஏ.குணவர்த்த தேரர், வணக்கத்திற்குரிய தம்பலா அபில தேரர், பிரபல எழுத்தாளர் குணதாச அமர சேகர, நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுன ரணதுங்க ஆகியோர் கலந்து கொண்டனர். (உ-63,10)

# செய்தித் துளிகள்

### அகில இலங்கை தமிழ் மொழித் தின விழா

(கொழும்பு)

அகில இலங்கை தமிழ் மொழித் தின விழா இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்வி அமைச்சின் தமிழ் மொழிப் பிரிவின் பணிப்பாளர் நல்லதம்பி நடராஜா தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி விழாவில் மனிதவள அபிவிருத்தி கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சர் கலாநிதி கருணாசேன கொடித்துவக்கு மற்றும் பாடசாலைக்கல்வி அமைச்சர் சுரநிமல ராஜபக்ஷ ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-18)

### மீனவரைப் பதம் பார்த்த சுறா

(மருதங்கேணி)

சுறாமீன் கடித்ததில் மீனவர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளானர்.

மேற்படி சம்பவம் கடந்த வியாழன் அன்று அதிகாலை பூநகரி பள்ளிக்குடாக் கடலில் இடம் பெற்றுள்ளது.

கடலில் வலையினை எடுப்பதற்காக படகிலிருந்து கடலுக்குள் இறங்கிய போது மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பூநகரி பள்ளிக் குடியை சேர்ந்த எட்வேட் குலம்நிலோசன்(வயது 23) என்பவரே படுகாயமடைந்தவராவார்.(உ-35)

### ச.ச.நிலைய புனரமைப்புக்கு ஒரு இலட்சம் நிதி

(தொல்புரம்)

வலிமேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள வட்டு-கிழக்கு அறிவொளி சனசமூக நிலையப் புனரமைப்புக்கென இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் அண்மையில் ஒரு இலட்சம் ரூபாவை வழங் கியுள்ளார்.

இந்நிதி மூலம் தற்போது புனரமைப்பு வேலைகள் துரிதமாக இடம் பெற்றுவருகின்றன. (உ-70)

### புகையிலைச செய்கையில் நாட்டம்

(இணுவில்)

இணுவில், கோண்டாவில், நீர்வேலி, கோப்பாய்ப் பகுதி விவசாயிகள் புகையிலைச் செய்கையில் ஆர்வம் காட்டிவருகின்றனர்.

இந்த வகையில், தற்போது நிலத்தைப் பண்படுத்தல், புகையிலைக் கன்றுகளை நாட்டல் போன்ற பணிகளில் இப்பகுதி விவசாயிகள் ஈடுபட்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது. (உ-122)

### இசைப்பிரிவு ஆலோசகர் நியமனம்

(கொழும்பு)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன இசைப்பிரிவு ஆலோசகராக கலாநிதி ரஞ்சித் அமரதேவ நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான டி.பி.மெண்டிஸ் இவரது நியமனக் கடிதத்தை நேற்று முன்தினம் வழுங்கினார். (தி-61)

### இலைச் சுருட்டி நோய்த் தாக்கம்

(கந்தர்மடம்)

தீவகத்தின் வேலணை, சரவணை, புளியங்கூடல், நாரந்தனை போன்ற பகுதி வயல்களில் இலைச்சுருட்டி நோயின் தாக்கம் அதிகரித்து வருகின்றது. (உ-112)

### வலுவூட்டல் பயிற்சி நெறி

(கந்தர்மடம்)

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் உள்ள அனைத்து கிராமிய மட்டத் தலைவர்களுக்குமான வலுவூட்டல் பயிற்சி நெறி நேற்று முதல் 3 தினங்கள் நல்லூர் பிரதேச செயலகத்தில் நடைபெற்று வருகின்றது.

இப் பயிற்சி நெறியில் கிராம மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் செயற்றிட்டங்களில் கிராமிய தலைவர்களின் பங்களிப்புக்கள் மற்றும் பல விடயங்கள் பற்றி கலந்துரையாடப்பட்டு வருகின்றது. (உ-112)

## பதவி மோகத்தால் இனப்பிரச்சினை தீர்வைப் பிற்போடக் கூடாது

### எதிர்க்கட்சித் தலைவர் ஆதங்கம்

(கொழும்பு)

இரு தசாப்தகால இனப் பிரச்சி னைத் [illegible] காணப்படவிட்டால் அது நாட்டில்



உள்ள அனைத்து இன மக்களையும் பாதிப்படையச் செய்யும் என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இரத்மலானையில் உள்ள சமாதி பௌத்த நிலையத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து பேசிய அமைச்சர் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டுமானால், தென் பகுதியில் உள்ள அரசியல்வாதிகளிடையேயும் அரசியல் கட்சிகளிடையேயும் பொது இணக்கப்பாடு காணப்படவேண்டும்.

மேலும் நாட்டைச் சீரழிவுக்கு இட்டுச் சென்ற அரசியல் வாதிகளுக்கு [illegible] சாவுக்கேடு என்றும் உண்டு. நெருக்கடி நிலைகளை மேலும் அதிகரிக்கச் செய்யாது, சமாதான முயற்சிகளை தொடர்வதற்கும், இனப் பிரச்சினைக்கும் தீர்வுகாண்பதற்கும் தமிழீழ விடுதலைப்புலிகள் உட்பட அனைவரும் ஒத்துழைப்பு வழுங்கவேண்டும்.

பதவி மோகம் காரணமாக இன பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதைப் பின்போடக்கூடாது. இதனை அனைத்துக் கட்சிகளும் கண்டிக்க வேண்டும்.

கடந்த கால யுத்தம் காரணமாக வடக்கு-கிழக்குப் பகுதிகளில் உள்ள தமிழர்களைப் போன்று தென்பகுதியில் உள்ள சிங்கள மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(தி-61)

## பூநகரி கோட்டப் பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர் எவரும் இல்லை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்வி வலயத்திற்கு உட்பட்ட பூநகரி கோட்டப் பாடசாலைகளில் ஆங்கில ஆசிரியர்கள் எவரும் இதுவரை நியமிக்கப்பட வில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இக் கல்விக் கோட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கு 28 ஆங்கில ஆசிரியர்கள் தேவையாக உள்ள நிலையில், இதுவரை ஒரு ஆங்கில ஆசிரியரைக்கூட நியமிக்கவில்லை.

இதனால் மேற்படி பாடசாலை மாணவர்களின் ஆங்கிலக் கல்வி குறித்து பெற்றோர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கிளிநொச்சி கல்வி வலயத்தில் 97 ஆங்கில ஆசிரியர்கள் தேவையான நிலையில் 4 ஆங்கில ஆசிரியர்கள் மட்டுமே கற்பித்தலில் ஈடுபட்டு வருவதாக கிளிநொச்சி கல்வி வலய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (உ-64,10)

## ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய நிர்வாக சபை தெரிவு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் புதிய நிர்வாக சபை நேற்றுத் தெரிவு செய்யப்பட்டது.

கொழும்பு சுகதாஸ உள்ளக விளையாட்ரங்கில் நேற்று நடைபெற்ற கட்சியின் 49 வது வருடாந்த சம்மேளனக் கூட்டத்தில் இத்தெரிவு பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவினால் அறிவிக்கப்பட்டது.

இதன்படி கட்சியின் தலைவராக பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவும், பிரதித் தலைவராக அமைச்சர் கருஜெசூரியாவும், பிரதம செயலாளராக சௌரத் ஹப்புக் கொட்டுவவும் தவிசாளராக மலிக்சமர விக்கிரமவும், பொருளாளராக நிமல் வீரரட்ணவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நிறைவேற்று செயற்குழு உறுப்பினர் பதவிக்கு பிரேரிக்கப்பட்ட 71 பேரும் ஏக மனதாக தெரிவுசெய்யப்பட்டனர். (தி)

## நீர் விநியோக தொழிற்சங்கங்களின் கோரிக்கையை நிறைவேற்ற முடிவு

(கொழும்பு)

தேசிய நீர் விநியோக வடிகால் அமைப்புச் சபையின் கூட்டுத் தொழிற்சங்கங்கள் விடுத்த கோரிக்கையை அரசாங்கம் நிறைவேற்றத் தீர்மானித்துள்ளது.


இதற்கமைய ரி.சீ பெரேரா சம்பள சிபார்சுகள் அமுல் செய்யப்படவுள்ளன. இதன் அடிப்படையில் அடிப்படைச் சம்பளதுடன் ஒருவருட சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளது.


பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் திறைசேரி அதிகாரிகளுடன் நேற்று நடத்திய பேச்சுக்களைத் தொடர்ந்து இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

கடந்த புதன்கிழமை முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுவந்த ஊழியர்கள், நேற்று முன்தினம் இரத்மலானையில் உள்ள தேசிய நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபை அலுவலகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டமும் நடத்தி இருந்தமை தெரிந்ததே. (தி-61)

# அறப்பணி நிலைய

# பு மலர் - 14.12.2003





## ணி நிலையம்

## பகச் சின்னம்!

திற்கு அருகாமையில் சைவ அறப்பணி
ர்த்தமாக இந்து கலாசார அமைச்சின்
டுள்ளது.
லை மாதம் 2ஆம் திகதி இடம்பெற்றது.

இந்து கலாசார அமைச்சர் மாண்புமிகு
கட்டடம் மிகவும் துரிதமாக நிர்மாணம்
ர். நுழைவாயில்கள். சிதம்பர நடராஜப்
ாக வடிவமைக்கப்பட்டது. இக் கட்டட
ாக எடுத்துக் காட்டியுள்ளது.
ப் பல வகையான அறப்பணிகள்
அறநெறிப் பாடசாலை. கணனிப் பயிற்சி
ரி நூல் நிலையம் என்பன ஒருங்கே

ுச் சிதம்பர சைவ அறப்பணி நிலையத்
பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய
ங்குவது எமது சைவ மக்களிற்கு
ர்களுடன் நல்லை ஆதீனம் 2வது
ச்சாரிய சுவாமி... கலாநிதி தங்கம்மா
க் குருக்கள் என தகைசால் பெரியோர்கள்
பானதாகும்.
ருந் திய சைவ அறப்பணி நிலையத்
சமயத்தின்பால் கொண்டுள்ள பற்றையும்
டி பல அறப்பணிகளை மேற்கொள்ள
ாடு. இவ் அறப்பணிநிலையப் பணிகள்
றோம்.

### கலாநிதி வைத்தீஸ்வரக் குருக்களின

## வாழ்த்துச் செய்தி



ஈழத்தின் சிறப்பு மிக்க சிவாலயங்களில் ஒன்றான காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் புதிதாக அமைக்கப் பட்டுள்ள ஈழத்துச் சிதம்பர அறப்பணி நிலையம் இன்று திறந்துவைக்கப்படுவதையிட்டு மிக மகிழ்ச்சி அடைகின்றேன்.

கடந்த காலங்களில் காரைநகரில் சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதற்காக பல்வேறு அமைப்புக்கள் செயற்பட்டு வந்தன. அந்த வகையில் ஈழத்துச் சிதம் பரத்தின் சுற்றாடலிலே மணிவாசகர் சபை, மாணிக்கவாசகர் மடாலயம், சிவாச் சிரமம் போன்ற சபைகள் சேவையாற்றி வந்தன.

இன்று இந்து கலாசார அமைச்சின் நிதிஉதவியுடன் இந்திய சிற்பக் கலைஞர்களின் அழகிய சிற்ப வேலைப்பாடு களுடன் அமைந்துள்ள மிகப் பிரமாண்டமான இந்த அறப பணி நிலையத்திலே அன்னதானம், குருமார்களுக்கான பயிற்சி நிலையம், சமஸ்கிருத, சைவ நூல்கள் அடங்கிய நூல் நிலையம், கணனிப் பயிற்சி நிலையம், அறநெறிப் பாடசாலை, யாத்திரிகர்கள் தங்குமிடம் உட்பட பல்வேறு அறப்பணிகளை ஆற்றத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த அறப்பணி நிலையம் ஈழத்துச் சைவர்கள் மத்தியிலே முன்மாதிரியாகத் திகழ்வதுடன் சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதற்குச் சேவையாற்ற வேண்டுமென எல்லாம் வல்ல ஈழத்துச் சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானைப் பிரார்த்தித்து இந்த அறப் பணிகளை ஆரம்பித்து வைத்த இந்துகலாசார அமைச்சரை வாழ்த்தி அமைகின்றேன்.

க.. ாநிதி.சிவஸ்ரீ க.வைத்தீஸ்வரக் குருக்கள்
காரைநகர்.

### இந்து கலாசார அலுவல்கள் அமைச்சரின்

## வாழ்த்துச் செய்தி



வரலாற்றுப் பெருமை மிக்க காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் சைவத் தமிழ் மக்களின் இறை வழிபாட்டுத் தொன்மைக்கும் உயர்ந்த கலை பண்பாட்டு விழுமியங்களுக்கும் சான்றாதார மாகும்.

ஈழவளநாட்டில் ஓங்குபுகழ்பெற்ற சிவாலயங்களில் காரைநகர்ச் சிவன் ஆலயம் தென்னகத்து சிதம்பரத்திற்கு ஒப்பிடப்படுவதாயின் அதன் மகிமையும் கீர்த்தியும் அள விடற்கரியது.

இத்தகைய சிறப்புமிகு ஆலயத்தில் அறப்பணிசெய்யும் பொருட்டு இந்து கலாசார அமைச்சினால் இந்நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

ஆலயங்கள் என்பன வெறுமனே வழிபாட்டுத் தலங்களாக மட்டும் இருந்து விடாமல், சமூகப் பணி செய்யும் அறப்பணி நிலையங்களாகவும் செயற்படவேண்டும். அவ்வாறு செயற்படும்போதே மனித சமூகம் முன்னேற்றம் அடையும்.


தான் சார்ந்த சமயத்தின் மகிமையை ஒவ்வொரு மனிதனும் உணர்ந்துகொள்ள வேண்டுமாயின், ஆலயங்கள் மனித சமூகத்தோடு இணைந்து செயலாற்றவேண்டும்.

அவ்வகையில் ஈழத்துச் சிதம்பரத்தில் புதிதாக அமைக்கப்பட்டு இன்று திறந்துவைக்கப்படும் அறப்பணி நிலையம், மக்கள் சேவையை வழுவின்றி செய்து இவ்வையகத்திற்கு முன்மாதிரியாக வழிகாட்ட எல்லாம் வல்ல ஆடவல்லானை வேண்டி வாழ்த்துகின்றேன்.

| | |
|---|---|
| இந்து கலாசார அமைச்சு, | தி.மகேஸ்வரன் (பா.உ.) |
| இலங்கை. | அமைச்சர். |

### காரை. உதவி அரச அதிபரின்

## வாழ்த்துச் செய்தி



சைவமும் தமிழும் சிறப்புறத் தழைத்தோங்கும் காரைநகரில் அறப்பணி நிலையம் அமைத்து இன்று திறப்பு விழா நடைபெறுவதையிட்டு மிக மகிழ்வடைகின்றேன். அதனையொட்டி வலம்புரிப் பத்திரிகையில் வெளிவரும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமை யடைகின்றேன்.

ஈழத்தில் பல ஆலயங்கள் அமைக்கப்பட்டு கிரியை வழிபாடுகள் சிறப்பாக இடம்பெற்று வருகின்றபோதும் அங்கு அறப்பணிகள் மிகவும் மந்த கதியிலேயே இடம்பெறுகின்றன. அந்த வகையில் காரைநகரில் ஈழத்துச்சிதம்பரத்தில் பல இலட்சம் ரூபா செலவில் இந்து கலாசார அமைச்சினால் அறப்பணி நிலையம் அமைக்கப்பட்டுள்ளமை பாராட்டுக்குரியது.

இவ் அறப்பணி நிலையத்தினூடாக அறநெறிப்பாடசாலை, வறிய பாடசாலை மாணவர்களிற்கான புலமைப்பரிசில், கணனிப் பயிற்சி நிலையம், குருமார்களிற்கான பயிற்சி நிலையம், யாத்திரிகர்களிற்கான தங்குமிடம், அன்னதானம் உட்பட பல அறப்பணிகள் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

ஈழத்துச்சிதம்பரத்தில் அமைந்த இந்த அறப்பணி நிலையம் ஏனைய சைவ பொதுஅமைப்புக்களுக்கு முன்மாதிரியான வழிகாட்டியாகவும் திகழும் என்பதில் ஐயமில்லை. இதன் வெளிப்பாடாக பெரும்மதிப்புக்குரிய திருவாவடுதுறை ஆதீனம் சுவாமிகள் வருகை தந்து சிறப்பித்து இவ் அறப்பணி நிலையத்தை ஆரம்பித்து வைக்கின்றமை எமது இந்து மக்கள் செய்த பெரும் புண்ணியமாகும்.

அந்த வகையில் இவ் அறப்பணி நிலையச் செயற்பாடுகள் திறமையாகவும், முழுமையாகவும் செயற்பட ஈழத்துச் சிதம்பரத்தானை வேண்டி வாழ்த்தி மகிழ்வடைகின்றேன்.

| | |
|---|---|
| | வே.சாம்பசிவம். |
| காரைநகர். | உதவி அரசாங்க அதிபர். |




கலைமகள் களஞ்சியம்
316, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

க. கு. கந்தையாபிள்ளை அன் சன்ஸ்
318,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்

செல்வம்
330,ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

மகாராணி பட்டுச்சோலை
50, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

அவோ பொறியியல் நிர்மாணிகள்
80/பெருத்தித்துறைவீதி
யாழ்ப்பாணம்.
0777 283600

மலரமைப்பு:
வலம்புரிச்
செய்தியாளர்
காரைநகர்

வேணி களஞ்சியம்
165, கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

சிவகணேசன் ஸ்ரோர்ஸ்
41, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

# தேவாலயத்துக்குச் சென்ற 7 இஸ்ரேலியர்கள் பலஸ்தீனர்களால் சுட்டுக் கொலை

(ரெல்அவில்)

பலஸ்தீனத்தின் மேற்குக் காஸாப் பகுதியிலுள்ள தேவாலயமொன றுக்குச் சென்ற 7 இஸ்ரேலியர்கள பலஸ்தீனர்களால் சுட்டுக் கொல லப்பட்டுள்ளனர்.

மேற்குக் கரையிலுள்ள நபுல்ஸ் நகரின் சர்ச்சைக்குரிய தேவால யத்திற்கு முன்அறிவித்தலின்றிச் சென்ற இஸ்ரேலியர்களே இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவர்களாவர்.

நபுல்ஸ் நகரில் அமைந்துள்ள இந்தத் தேவாலயத்தை தமது புனித தேவாலயம் என கிறிஸ்தவர்களும், தமது புனிதரொருவர் அடக்கம் செய் யப்பட்டுள்ள புனிதஸ்தலம் என இஸ் லாமியர்களும் கூறி வருகின்றனர்.

இதனால் எழுந்த சர்ச்சைகளை யடுத்து பாதுகாப்பு கருதி இந்த ஆலயத்திற்கு செல்வதற்கு இஸ்ரே லிய இராணுவம் தடைவிதித்திருந்தது.

இந்நிலையில் ஆலயத்திற்கு உற சவத்தைப் பார்வையிடவென வாக னமொன்றில் சென்ற இஸ்ரேலியர்கள் 7 பேரையும் அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த பலஸ்தீனர்கள் சுடடுக் கொன்றுள்ளனர்.

தடைசெய்யப்பட்ட பிரதேசத்திற் குள் இவர்கள் சென்றதால் இச்சம்பவம் குறித்து இஸ்ரேலிய தரப்பிலிருந்து எந்தக் கருத்தும் தெரிவிக்கப்பட வில்லையென பலஸ்தீனத் தகவல் கள் தெரிவிக்கின்றன. (து-2)

# தெற்காசிய மக்களின் முன்னேற்றத்திற்கு அமைதி பேண வேண்டும் – வாஜ்பாய்


(புதுடில்லி)

தெற்காசியாவில் வாழ்கின்ற 150 கோடி மக்களின் முன்னேற்றத்திற்கு அமைதியே முக்கிய இயந்திரம் என இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ் பாய் கூறியுள்ளார்.

ஹிந்துஸ்தான் ரைம்ஸ் நாளிதழின் ஏற்பாட்டில இடம்பெற்ற "அமைதியின் பயனும் தெற்காசிய நாடுகளின் முன்னேற்றமும்" எனும் கருததரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே வாஜ்பாய் இக்கருத்தை முன் வைத்துள்ளார்.

தெற்காசிய நாடுகள் விடுதலை பெற்று அரைநூற்றாண்டுக்கு மேலா கியும் இந்த உண்மையை உணரா திருப்பது வருத்தமளிப்பதாகச் சுட் டிக்காட்டிய அவர் தெற்காசிய நாடு களை அமைதி பேணுமாறு வலியு றுத்தியுள்ளார். (து-2)

WORLD NEWS உலக தரிசனம்



தென்னாபிரிக்காவின் தலைநகர் பிரிடோறியாவில் உள்ளஉயிரியல் பூங்காவிற்கு வேட்டைப பயிற்சிக்காக கொண்டுவரப்பட்ட சீனப் புலிக்குட்டி. இது தனது முதல் வேட்டைப்பயிற்சியை அங்கு ஆரம்பித்தபோது.

# இராணுவ திட்டமிடல் அமைப்பை நிறுவ ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் இணக்கம்

## அமெரிக்கா அதிருப்தி

(ப்ருஸெல்ஸ்)

நேட்டோ அமைப்பின் கெடுபிடி களிலிருந்து விலகி சுதந்திரமாகச் செயற்படக் கூடிய இராணுவத்திட்ட மிடல் அமைப்பொன்றை நிறுவுவதற்கு ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் இணக்கம் கண்டுள்ளன.

பெல்ஜியத் தலைநகர் ப்ருஸெல்ஸில நேற்று முன்தினம் ஆரம்பமான ஐரோப் பிய ஒன்றிய உச்சி மாநாட்டிலேயே இந்த இணக்கப்பாடு காணப்பட்டது.

இதன் மூலம் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் நேட்டோ அமைப்பிலுள்ள தத் தமது இராணுவத் தலைமைய கங்க ளுககிடையில் தொடர்புகளை ஏற்ப டுததிக் கொள்வதற்கான குழுவொன றையும்இந்த ஒன்றியம் நியமிக்கவுள்ளது.

இத்திட்டத்திற்கு ஒன்றியத்தின் முக்கிய உறுப்பு நாடுகளான ஜேர்மன், பிரான்ஸ் ஆகியன பூரண ஆதரவு தெரிவித்திருந்த போதும் அமெரிக்கா அதிருப்தி தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஐரோப்பிய ஒன்றிய நாடுகள நேட்டோ அமைப்பிலுள்ள நாடுகளுடன் இராணுவத் தொடர்புகள் ஏற்படுத்திக் கொள்வது உட்பட சில முக்கிய விடயங்களுக்கு நேட்டோ கெடுபிடிகளை விதித்து வந்த தையடுத்தே, ஐரோப்பிய ஒன்றியம் அமைப்பு கடந்த சில காலமாக இந்த இணக்கப்பாடடை ஏற்படுத் திக்கொண்டுள்ளது. (து-2)



பெய்ஜிங்கில் பிறந்த பனிக்கரடி ஒன்று டோக்கியோவில் உள்ள உயிரியல் பூங்காவில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. விலங்குகளில் அரிய வகையானதும், அழிந்து வரும் விலங்காகவும் இந்த பனிக்கரடி கருதப்படுகிறது.

# கனடாவின் புதிய பிரதமர் ஏற்படுத்திய மாற்றங்கள் அமைச்சரவையிலிருந்து பலருக்கு கல்தா

(ஒட்டாவா)

உடனடி அமுலுக்கு வரும் வகை யில் தனது அமைச்சரவையில் புதிய மாற்றங்களை செய்துள்ள கனடாவின் பிரதமர் போல் மார்டீன் இப்புதிய மாற்றங்கள் மூலம் பல அமைச்சர்களை பதவி நீக்கம் செய் துள்ளார்.

இந்த திடீர் மாற்றங்கள் குறித்து கருத்து வெளியிட்டுள்ள அவர், அடுத்த வருடம் மே மாதம் நடைபெற வுள்ள பொதுத்தேர்தலுக்கு முன் நாட்டில்பல முன்னேற்றங்களை ஏற்ப டுத்தவே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர் களுக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்க உறுதி எடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

கனடாவின் லிபரல் கட்சியைச சேர்ந்த ஜீன் ஷெரோட்டின் பிரதமர் பதவியில் இருந்து நீக்கப்பட்டதை அடுத்து கடந்த மாதம் புதிய பிர தமராக பதவியேற்றுள்ள போல் மார்டீன் கனடா - அமெரிக்காவிற்கு இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்த திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (து-2)

# ஐரோ.ஒன்றியத்தின் அரசியல் சாசனத் திருத்தம் எதிராகச் செயற்பட போலந்து ஜனாதிபதி உறுதி

(வார்ஸா)

ஐரோ.ஒன்றியத்தில் புதிதாக கொண்டு வரப்படவுள்ள அரசியல் சாசனத்திருத்தத்திற்கு எதிராக தனது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்த போலந்து ஜனாதிபதி உறுதிபூண் டுள்ளார்.

பெல்ஜியத் தலைநகர் ப்ருஸெல் ஸில ஐரோப்பிய ஒன்றியத்தின் வரு டாந்த மாநாடு ஆரம்பித்துள்ளது.

இந்த மாநாட்டில் புதிய வாக்களிப்பு முறையொன்றை அறிமுகப்படுத்தும் வகையில் புதிய பிரேரணை ஒன்றைக கொண்டுவர ஐரோப்பிய ஒன்றியம் முடிவு செய்துள்ளது.

இந்த முடிவினையடுத்தே போலந்து ஜனாதிபதி மேற்குறித்த தனது நிலைப்பாட்டைத் தெரிவித்துள்ளார்.

அவர் தனது நிலைப்பாடு குறித்து அங்கு தெரிவிக்கையில், "ஐரோப் பிய ஒன்றியத்தால் கொண்டு வரப் படவுள்ள புதிய வாக்களிப்பு முறையி னால் பல நாடுகளின் வாக்களிக் கும்உரிமைகள் பறிக்கப்படலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

இந்நிலை ஏற்படாது தடுப்பதற்காக போலந்து தனது வீட்டோ அதிகாரத் தைப் பயன்படுத்தப் போகின்றது. இதற் கான உரிமையும் அதற்கு உண்டு என அவர் பகிரங்கமாக கூறியுள்ளார். (து-2)

# இஸ்ரேல்அமைக்கும் பாதுகாப்பு வேலி மத்தியகிழக்கு சமாதானத்தின் தடைவேலி

## பலஸ்தீன பிரதமர் மீண்டும் விசனம்

(ஜெருசலேம்)

மேற்குக் கரையில் இஸ்ரேல் நிர்மானித்து வரும் பாதுகாப்பு வேலிகள் அமெரிக்காவினால் தயாரிக் கப்பட்டுள்ள சமாதானத் திட்டத்தை மழுங்கடிக்கச் செய்யும் என்று பலஸ்தீனப் பிரதமர் அஹமட் குரேய் மீண்டும் கூறியுளளார்.

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்துக கும் இடையே இடம் பெற்று வரும மோதல்கள் காரணமாக மத்திய கிழக்கு சமாதானத்திட்டம் தேக்க நிலையை அடைந்துள்ள சமயத்திலே பலஸ்தீனப் பிரதமா இதனைக் கூறியுள்ளார்.

இஸ்ரேலின் நடவடிக்கைகள் சமா தானத்துக்காக குரல் கொடுக்கும் எவரையும் உயிர் இழக்கச் செய்யும் என்று சுட்டிக்காட்டிய பிரதமர், தற்போது அமைதி நிலவுகின்ற போதிலும் புதிய அச்சுறுத்தலை தோற்றுவிப்பதற்கு வாய்ப்பிருகின் றது என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

இஸ்ரேலிய பாதுகாப்பு வேலி யினால் புதிய பயங்கரவாத நடவடிக்கைகளை ஒரு போதும் தடுத்து நிறுத்த முடியாது என்று அவர் எச்சரித்துள்ளார். (து-9)



பாடல்,ஆடல், நடிப்பு ஆகியவற்றில் புகழ்பெற்ற மடோனா தனது எழுத்தாற்றலிலும் புகழ் பெறும் வகையில் புத்தகம் ஒன்றை வெளியிட்டுள்ளார். லொஸ் ஏஞ்சலஸ் நகரத்தில் உள்ள பள்ளி மாணவர்களுக்கு அப்புத்தகத்தைப் படித்துக் காட்டுகிறார்.

ஆந்திராவிலிருந்து சென்னைக்குக் கடத்தி வரப்பட்ட கஞ்சா மூட்டைகள் கண்டுபிடிக்கப்பட்டு லொரியுடன் பறிமுதல் செய்யப்பட்டது. இது தொடர்பாக 3 பேர் கைது செய்யப்பட்டனர். கடத்தியவர்களும், கஞ்சா மூட்டைகளும்.



# ரஷ்யாவில் 8 படையினர் பலி

(மொஸ்கோ)

ரஷ்யப் படையினர் மீது செச்சி னிய தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் 8படை யினர் கொல் லப்பட்டுள்ளதுடன் 7பேர் காய மடைந்துள்ளனர்.

ரஷ்யப் படையினரின் முகா மொன்றின் மீதே இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்று முன்தினம் கவசவாகனமொன்றில் ரோந்து சென்று கொண்டிருந்த ரஷ்யப் படையினர் மீதும் செச்சினியத் தீவி ரவாதிகள் தாக்குதல் நடத்தி யுள்ளனர்.

இச்சம்பவத்தின் போது ஏற்பட்ட சேத விபரங்கள் குறித்து எதுவும் தெரியவரவில்லை. (து-2)

உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்து ளெல்லாம் உளன் - குறள்

## வலம்புரி

### வெளிப்பட்ட உண்மை

ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்கு ஐக்கிய தேசிய முன்னணி அரசு முன்வருமாக இருந்தால் பாதுகாப்பு அமைச்சை அரசிடம் ஒப்படைக்க ஜனாதிபதி தயாராக இருப்பதாக பொதுஜன ஐக்கிய முன்னணியின் பேச்சாளர்களான கலாநிதி சரத் அமுனுகமவும், ஸ்ரீபால டி சில்வாவும் தெரிவித்துள்ளனர்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி என்ற முறையில், நாட்டின் பாதுகாப்பு சம்பந்தமான அனைத்து விவகாரங்களுக்கும் நானே பொறுப்பு எனக்கூறிய ஜனாதிபதி சந்திரிகா தனது கூற்றுக்குச் சான்றாக உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பையும் சுட்டிக் காட்டியிருந்தார்.

நாட்டின் பாதுகாப்பு விடயத்தில் தான் அக்கறை காட்டத் தவறினால் அஃது தனக்கெதிராக நீதிமன்று செல்வதற்கு கூட வழிவகுத்துவிடும் என்பது ஜனாதிபதியின் கருத்து.

ஆனால், இப்போது அதனை யெல்லாம் விடுத்து ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழித்து, பழையபடி பாராளுமன்ற ஆட்சி முறையை கொண்டு வருவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஆதரவு வழங்குவாராயின் பாதுகாப்பு அமைச்சை மீண்டும் பிரதமரிடம் கையளிக்க ஜனாதிபதி தயாராக இருக்கின்றார் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது.


பொதுஜன ஐக்கிய முன்னணியின் பேச்சாளர்கள் தெரிவித்த விடயம் 'நாட்டின் பாதுகாப்பு கருதியா ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சை பொறுப்பேற்றுக் கொண்டார்?' என்ற கேள்விக்கு விடை பகர்ந்துள்ளது.

அதாவது, ஜனாதிபதி சந்திரிகாவிற்கு இருக்கக்கூடிய ஒரே யொரு பிரச்சினை அடுத்த ஜனாதிபதி தேர்தலாகும்.

# இறையமைதி எம்மில் குடிகொள்ளும் போது

# இயேசுவுடன் நாம் இணைவு பெறலாம்

காருளின் நடுவே பயணம் செய்பவருக்கு விண்மீனின் ஒளியானது புதிய தெம்பைத் தருவதாக அமை



யும். களைத்திழைத்து வேலை செய்பவருக்கு கால் குவளைத் தண்ணீரும் அமிர்தம் போல இருக்கும். பணமில்லாத ஏழைக்கு பசிக்குணவு கிடைப்பது பஞ்சணை மெத்தையில் இருப்பதற்குச் சமனாகும். இவ்வாறு தேவையுள்ளோரின் வாழ்விலே கிடைக்கும் சிறிய அளவு சக்தி பன்மடங்கு பெரியதாக மதிக்கப்படும். அடக்கி ஒடுக்கப்பட்ட இஸ்ரேல் மக்களின் வாழ்விலும் மெசியாவாகிய மீட்பரின் வருகைக்கான எதிர்பார்ப்பும் இவ்வாறே அமைந்தது. முன்னோடியாக வந்த திருமுழுக்கு யோவானின் போதனையால் ஆட்கொள்ளப்பட்ட மக்கள் அவரையே மெசியா என்று எதிர்பார்த்தார்கள். அவருடைய போதனையும் வாழ்வு மெசியாவைச் சுட்டிக் காட்டுவதாக அமைந்திருந்தது.

### திருமுழுக்கு யோவானின் திருவுரை

நாம் ஏற்றுக்கொள்ளும் பொறுப்புகளுக்குப் பிரமாணிக்கமாக இருக்கின்றோமா? கடமைகளிலே கண்ணியமுள்ளவர்களாக இருக்கின்றோமா? செயல்பாட்டிலே செம்மையாளர்களாகச் செயற்படுகின்றோமா? உண்மைத் தன்மை நம்மிடம் உண்டா? உயர்வான இரக்கம் உண்டா? சட்டத்தை மதித்து நியாயத்தை கைநழுவ விடுகின்றோமா? சிந்தித்துப்பார்ப்போம். திருமுழுக்கு யோவான் இயேசுக் கிறிஸ்துவாகிய மீட்பரின் பாதையை ஆயத்தம் செய்ய வந்தார். கரடுமுரடானவற்றை சமதரையாக்கவும் கோணலானவற்றை நேராக்கவும், பள்ளத்தாக்குகளைச் சமதரையாக்கவும் பண்பட்ட உள்ளங்களாக்கவும் பரிந்து பேசினார். அவரவரின் கடைமைகளை வகுத்துச் சொன்னார். அவ்வாறு வாழாதவர்கள் இறை தண்டனைக்கு ஆளாவார்கள் என்பதை உறுதிபடக் கூறினார். அவரைப் போன்ற மன உறுதியும் உண்மை, நேர்மையான செயற்பாடும் எம்மிடம் மலர வேண்டும்.

### கிறிஸ்துவின் இரண்டாம் வருகை

புனித பவுலடியார் யேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு நாம் தயாராக வாழவேண்டும் என்பதை தெளிவுபடக் கூறிவைத்துள்ளார். என்றும் மகிழ்வுடனும், கனிவுடனும் நாம் வாழவேண்டும் என்று அறிவுரை கூறுகின்றார். எதைப்பற்றியும் கவலை கொள்ளாமல் இறைவன் செய்த நன்மைகளுக்கு நாள்தோறும் நன்றியுள்ளவர்களாக வாழ வேண்டும். இறைவேண்டல் வழியாக எம் விண்ணப்பங்களை இறைவனுக்குத் தெரியப்படுத்தி வாழும் பொழுது அறிவெல்லாம் கடந்த இறையமைதி நம்மில் குடி கொள்ளும். இதனாலே நாம் கிறிஸ்து இயேசுவோடு இணைவு பெற்றவர்களாக வாழமுடியும் என்பதை வலியுறுத்திக் கூறுகின்றார்.

## பரமபிதா காட்டிய பாதை

### விண்ணரசா? உலகரசா?

இயேசுக்கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்காக எம்மையே தயார் செய்து அவரது வருகையை எதிர் நோக்கிக் காத்திருக்கும் நாம் மரியன்னையிடம் விளங்கிய தாழ்ச்சியும், பொறுமையும் எல்லாவற்றையும் ஆண்டவருக்காகச் செய்யும் மனப்பக்குவமும் உள்ளவர்களாக வாழ எம்மை பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும். மாறாக அதிகாரமும் அலைச்சல் இல்லாச் செயற்பாடுகளும், பண்பற்ற சொற்பிரயோகங்களும் பாகுபாடான தன்மைகளும் நம்மைவிட்டு அகலவேண்டும். இவற்றை வைத்திருப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களினாலே கிறிஸ்துவின் வருகையை எதிர்நோக்க முடியாது. அவர்களுக்கு கிறிஸ்து தண்டனையின் அரசராகவே காட்சியளிப்பார். அவருடைய வார்த்தையின் சீடர்களாக, சாட்சி பகர்கின்றவர்களாக, மலைமேல் ஒளிர்கின்ற ஒளிகளாக, சாரமுள்ள உப்பாக திருந்திய மகனாக, நல்ல சமாரித்தனாக வாழ்கின்றவர்கள் கிறிஸ்துவின் வருகையாலே மகிழ்வடைவார்கள். ''வாருங்கள் என் தந்தையின் ஆசி பெற்றவர்களே உங்களுக்காக என் தந்தை ஏற்பாடு செய்துள்ள அரசு உங்கள் உரிமையாகும்'' என்று அழைத்துச் செல்கின்ற வருகையாக அமையும். எதனை நாம் நமதாக்கிக் கொள்வோம். இறையரசையா? இவ்வுலக அரசையா? விவிலியப்பாதையை நமதாக்குவோம் விண்ணரசை உரிமையாக்குவோம்.

**அமல அருள்தாசன்**

---

ஆள்மாறாட்டத்தைத் தவிர்க்கும் வகையில்

# பருவகாலச் சீட்டுப் பெறும் நடைமுறைகளில் இறுக்கம்

(யாழ்ப்பாணம்)

பருவகாலச் சீட்டுக்களின் பயன்பாட்டில் பரவலாக ஆள்மாறாட்டம் இடம் பெற்றுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து, இதனை வழங்குவதற்கு இதுவரை காலமும் அமுலில் இருந்த நடைமுறைகள் இனிமேல் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படும் என வட பிராந்திய போக்குவரத்துச் ... ளைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதையும் பொதுமுகாமையாளர் உறுதிப்படுத்தியுள்ளார். (உ)

பாராளுமன்றத்துக்கு முன்னால்

# சுகாதாரத் தொழிற்சங்கங்கள் போராட்டம் நடத்த முடிவு

(கொழும்பு)

சுகாதார சேவை தொழிற்சங்கங்கள் நாளை திட்டக்கிழமை பாராளுமன்றத்துக்கு முன்னால் ஒரு நாள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளன.

சுகாதார சேவை தொழிற்சங்கங்களினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் இதுவரை நிறைவேற்றப்படாத காரணத்தாலேயே இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

சுகாதார சேவை தொழிற்சங்கங்களின் சம்மேளனத்தின் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

சுகாதாரத் துறையில் இரு தொழிற்சங்கங்களுக்கு இடையில் பாகுபாடான

# வெட்டுப்புள்ளியால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் முறையீடு செய்யலாம்

முறையை கொண்டு வருவதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஆதரவு வழங்குவாராயின் பாதுகாப்பு அமைச்சை மீண்டும் பிரதமரிடம் கையளிக்க ஜனாதிபதி தயாராக இருக்கின்றார் என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் பேச்சாளர்கள் தெரிவித்த விடயம் 'நாட்டின் பாதுகாப்பு கருதியா ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சை பொறுப்பேற்றுக் கொண்டார்?' என்ற கேள்விக்கு விடை பகர்ந்துள்ளது.

அதாவது, ஜனாதிபதி சந்திரிகாவிற்கு இருக்கக்கூடிய ஒரேயொரு பிரச்சினை அடுத்த ஜனாதிபதி தேர்தலாகும். இலங்கையின் அரசியல் யாப்பின் பிரகாரம் ஜனாதிபதி பதவியை ஒருவர் இருதடவைகள் மட்டுமே அலங்கரிக்க முடியும்.அந்த இரு தடவையும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்கு முடிவடைகின்றது. எனவே அடுத்த ஜனாதிபதி தேர்தலில் அவர் போட்டியிடும் வாய்ப்பு முற்றாக இல்லை.

இந்நிலையில் அடுத்த ஜனாதிபதியாகும் வாய்ப்பு பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிற்கே உண்டு. பொதுஜன ஐக்கிய முன்னணியில் யார்தான் ஜனாதிபதி வேட்பாளராக போட்டியிட்டாலும் இந்த முடிபை மாற்றிவிடமுடியாது.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா ஜனாதிபதியாக பதவியேற்றால் இப்போது தனக்கிருக்கக்கூடிய அனைத்து அதிகாரங்களும் அவரிடம் கைமாறிவிடும். அ∴து தனது எதிர்காலத்திற்கு ஆபத்தாகிவிடுமென்ற தீர்மானத்தின் அடிப்படையிலேயே ஜனாதிபதி ஆட்சிமுறையை இல்லாதொழிக்க ஜனாதிபதி சந்திரிகா பெரும்பாடுபடுகின்றார். எனினும் இதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா இசைவதாக இல்லை.

தமக்கு கிடைக்கக்கூடிய சர்வவல்லமை பொருந்திய பதவியை யார்தான் விடுவார்கள்! இதில் பிரதமர் ரணிலுக்கு மட்டும் என்ன விதிவிலக்கு!.

(ஆள்மாறாட்டத்தைத் தவிர்க்கும் வகையில்)

# பருவகாலச் சீட்டுப் பெறும் நடைமுறைகளில் இறுக்கம்

(யாழ்ப்பாணம்)

பருவகாலச் சீட்டுக்களின் பயன்பாட்டில் பரவலாக ஆள்மாறாட்டம் இடம் பெற்றுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டதையடுத்து, இதனை வழங்குவதற்கு இதுவரை காலமும் அமுலில் இருந்த நடைமுறைகள் இனிமேல் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்படும் என வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பொதுமுகாமையாளர் அறிவித்துள்ளார்.

மாணவர்களுக்கான பருவகாலச் சீட்டினை அந்தந்தப் பாடசாலை அதிபர், பல்கலைக்கழகப் பதிவாளர், தொழில் நுட்பக் கல்லூரி அதிபர்களூடாக அவர்கள் சிபார்சுடன் விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதும்,

மாணவர்களது பாடசாலை/பல்கலைக்கழக தொழில் நுட்பக் கல்லூரி அடையாள அட்டை அல்லது தேசிய அடையாள அட்டை இலக்கம் பருவகாலச் சீட்டுக்களில் குறிப்பிடப்பட வேண்டும் என்பதும் ஏற்கனவே நடைமுறையில் இருப்பது தெரிந்ததே.

இதேவேளை, இந்தச் சரியான நடைமுறைகளைப் பின்பற்றின் எவ்வித தங்குதடையுமின்றி மாணவர்கள் உடனுக்குடன் பருவகாலச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதையும் பொதுமுகாமையாளர் உறுதிப்படுத்தியுள்ளார். (உ)

பாராளுமன்றத்துக்கு முன்னால்

# சுகாதாரத் தொழிற்சங்கங்கள் போராட்டம் நடத்த முடிவு

(கொழும்பு)

சுகாதார சேவை தொழிற்சங்கங்கள் நாளை திட்கட்கிழமை பாராளுமன்றத்துக்கு முன்னால் ஒரு நாள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளன.

சுகாதார சேவை தொழிற்சங்கங்களினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் இதுவரை நிறைவேற்றப்படாத காரணத்தாலேயே இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

சுகாதார சேவை தொழிற்சங்கங்களின் சம்மேளனத்தின் கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

சுகாதாரத் துறையில் இரு தொழிற்குழுக்களுக்கு இடையில பாகுபாடான சம்பள முரண்பாடுகள் இருந்து வருவதை ஆட்சேபித்தே இப்போராட்டம் நடத்தப்படவுள்ளது.

பல கட்டங்களில் சம்பளத்தை அதிகரித்தல் 1997ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதியிலிருந்து சம்பள நிலுவைகளை வழங்குவதில்லை போன்ற அமைச்சரவைத் தீர்மானங்களை எதிர்த்தும், சம்பள அதிகரிப்பு ஒன்றை மேற்கொண்டு சம்பள நிலுவையில் 50 சதவீதத்தை ஊழியர்களுக்கு வழங்கும் படி கோரியும் தொழிற்சங்கங்கள் பல்வேறு விதமான போராட்டங்களை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (தி-61)

# வெட்டுப்புள்ளியால் பாதிக்கப்பட்ட மாணவர்கள் முறையீடு செய்யலாம்

(கொழும்பு)

2003/2004 ஆம் கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழக இசற்கோர் வெட்டுப்புள்ளிகளின் அடிப்படையில் பாதிக்கப்பட்ட மாணவர்கள் மேன்முறையீடுகளைச் செய்யலாம் என பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இம் மேன் முறையீடுகளை வெட்டுப்புள்ளிகள் வெளியான காலத்தில் இருந்து 4 வார காலத்தினுள் செய்யலாம்.

வெளியான வெட்டுப்புள்ளிகளின் அடிப்படையில் நாட்டிலுள்ள சகல பல்கலைக்கழகங்களிலும் 12 ஆயிரத்து 623 மாணவர்கள் சகல துறைகளுக்கும் அனுமதிக்கப்படவுள்ளனர்.

சிறப்பு ஆற்றலின் அடிப்படையில் மேலும் ஆயிரம் மாணவர்கள் அனுமதிக்கப்படவுள்ளனர். (தி-61)

# மருந்து வகைகளின் விலையை சீராக்க உடன்படிக்கை

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் மருந்து வகைகளின் விலைகளை ஒரேவகையில் பேணும் வகையில் உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டுள்ளது.

வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சின் கீழ் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நுகர்வோர் விவகார அதிகார சபையும் இலங்கை மருந்துவப் பொருட்கள் இறக்குமதியாளர் மற்றும் உற்பத்தியாளர் சம்மேளனமும் இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன.

நாடெங்கிலும் உள்ள மருந்துப் பொருட்கள் விற்பனை நிலையங்களில் மருந்து வகைகள் பல்வேறு விலைகளில் விற்பனை செய்யப்படுவருகின்றன. இதனால் பொது மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர் இதனை நீக்கும் பொருட்டே இவ்வுடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது.

அத்துடன், மருந்து வகைகளின் விலைகளை நிர்ணயிக்கும் அதிகாரம் இலங்கை மருந்துவகை இறக்குமதியாளர் மற்றும் உற்பத்தியாளர் சம்மேளனத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. (தி)

## தினசரி தியானம்

## ஆத்மா

ஆத்மா உன்னுடைய இருதய அறைகளில் வசித்து வருகின்றது. இதுதான் இந்த உலகம். மனம் பிராணன், சரீரம், இந்திரியங்கள் ஆகிய அனைத்துக்கும் ஆதாரமாக இருக்கிறது. இது சச்சிதானந்தம். இது அழியாதது எல்லையற்றது. நிரந்தரமானது. என்றும் தூய்மையானது. விடுதலையுடன் இருப்பது. பூரணமானது. இது இரண்டாவது என்பது இல்லாத ஒன்றாகும். இது சத்தியமும் ஞானமுமாக இருக்கின்றது ரூபம் அற்றது குணம் அற்றது.

சுவாமி சிவானந்தர்

# நூலக வசதிகள் விஸ்தரிப்பு

(நவாலி)

இணுவில் சனசமூக நிலைய பொது நூலகத்தில தற்போது வாசகர்களின் நன்மை கருதி பல வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

அந்த வகையில், நூலகத்தில் மின் விளக்குகள், மின் விசிறிகள் ஆகியன பொருத்தப்பட்டுள்ளதுடன் உள்ளூர், வெளியூர் சஞ்சிகைகள் மற்றும் கணனி என்பனவும் பாவனைககாக வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-102)

# கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

(தொல்புரம்)

வலி.மேற்கு பிரதேச சபையின் சங்கானை உப அலுவலகப் பிரிவில் நாளை திங்கட்கிழமையும் வட்டுக்கோட்டை உப அலுவலக பிரிவில் எதிர்வரும் 17 ஆம் திகதி புதன்கிழமையும் கட்டாக்காலி நாய்கள் அழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருப்பதாக வலி.மேற்கு பிரதேச சபையின் செயலாளர் அறிவித்துள்ளார்.(உ-70)

# வாகன அனுமதிப் பத்திரங்களை இன்றும் பெற்றுக் கொள்ளலாம்

## தவறின் கொழும்பிற்கு திருப்பி அனுப்பப்படும்

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் போக்குவரத்து திணைக்களத்தினால் அண்மையில் யாழ்.மாவட்டத்தில் நடத்தப்பட்ட நடமாடும் சேவையின் போது சாரதி அனுமதிப் பத்திரம், வாகனப் பதிவுப் புத்தகம்,/சான்றிதழ், இலக்கத் தகடு ஆகியவற்றுக்கு விண்ணப்பித்து அதனை பெற்றுக் கொள்ளாதவர்கள்,இன்று யாழ் செயலகத்தில் உள்ள வாகனப் போக்குவரத்துத் திணைக்கள காரியாலயத்தில் அவற்றை பெற்றுக் கொள்ளுமாறு மோட்டார் போக்கு வரத்து உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் கேட்டுள்ளார்.

இன்று நடைபெறும் விசேட சேவையில் மேற்குறிப்பிட்ட வாகன ஆவணங்களைப் பெறத் தவறின் அவை கொழும்புக்குத் திருப்பி அனுப்பப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

இதேவேளை நேற்று நடை பெற்ற மேற்படி வாகன ஆவணங்களை வழங்கும் விசேட சேவையில் 540 பேர் சாரதி அனுமதிப் பத்திரங்களையும்,130 பேர் வாகனப் பதிவுப் புத்தகம்/சான்றிதழ்களையும், 78 பேர் இலக்கத்தகடுகளையும பெற்றுக் கொண்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மொத்தமாக 4 ஆயிரத்து 850 சாரதி அனுமதிப் பத்திரங்களும், ஆயிரத்து 660 பதிவுச் சான்றிதழ்களும்,இரண்டாயிரத்து 68 இலக்கத் தகடுகளும் விண்ணப்பித்தவர்களுக்கு வழங்குவதற்கென வாகனப் போக்குவரத்து திணைக்களத்திற்கு வந்து சேர்ந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ-10)

## றுகுணு பல்கலையின் கலைப்பீடம் மூடப்பட்டது

(நமது நிருபர்)

றுகுணு பல்கலைக்கழக மாணவர் மன்ற தெரிவின் போது ஏற்பட்ட மோதலையடுத்து பல்கலைக்கழகத்தின் கலை, சமூகவியல் பீடங்கள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் ரஞ்சித் சேனாரத்னா அறிவித்துள்ளார்.

ஏனைய பல்கலைக்கழகங்களிற்கும் இம்மோதல்கள் பரவுவதைத் தடுப்பதற்காகவே றுகுணு பல்கலைக்கழகத்தின் சிலபீடங்களை தற்காலிகமாக மூடிவிடுவதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் துணைவேந்தர் தெரிவித்துள்ளார்.

## சனி,ஞாயிறு தினங்களில் கடைகள் திறப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் நத்தார்,புதுவருடப் பண்டிகைகளை முன்னிட்டு இன்று தொடக்கம் எதிர்வரும் 28.12.2003 வரை சனி ஞாயிறு மற்றும் வர்த்தக விடு முறை தினங்களில் கடைகள் முழு நாளும் திறந்து வியாபாரம் செய்வதற்கு சகல வர்த்தகர்களும் அனுமதிக்கப்பட்டுள்ளனர் எனவும் இந்த நாட்களில் வேலை செய்யும் ஊழியர்களின் நலன் பேணப்பட வேண்டுமெனவும் யாழ் வணிகர் கழகம்கேட்டுள்ளது. (உ)

## உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட தமிழீழ விளையாட்டுத் துறையினரால் எல்லைப் படை மாவீரர் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்காக சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் மின்னொளியில் இரவு 7.00 மணிக்கு நடத்தப்பட்டுவரும் மாபெரும் உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் இன்று,

காட்சிப் போட்டிக்காக மட்டக்களப்பு மாவட்டத் தெரிவு அணி எதிர் பிரபல்யமான உதைபந்தாட்ட அணியும், இறுதிப் போட்டிக்காக 'அ' வெற்றி அணி எதிர் 'ஆ' வெற்றி அணியும் மோதவுள்ளன. (உ-18)

# பிரதமர்மீது நம்பிக்கை வைத்துள்ள மக்கள் ஜனாதிபதியை வெறுக்கின்றனர்

## அமெ.புத்திஜீவிகளின் அனுசரணையுடனான அறிக்கையில் விபரிப்பு

(கொழும்பு)

இலங்கையில் வாழும் 80 சதவீதமானோர் தற்போதைய சமாதான முன்னெடுப்பு நடவடிக்கைகளை ஆதரித்து வருகின்றனர். அதேவேளை தமிழ் முஸ்லிம் மக்களில் பெரும்பாலானோர் சமாதான முன்னெடுப்புக்களை வரவேற்கின்றனர். சிங்கள மக்களில் 50 சதவீதத்திற்கும் மேற்பட்டோர் இந்நடவடிக்கைகளுக்கு தமது எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர்.

இவ் வாறு இலங்கையின் சமாதான முன்னெடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக மாற்றுக் கொள்கைக்கான நிலையமும் சமூககுறிகாட்டி நிறுவனமும் இணைந்து அண்மையில் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

அமெரிக்க புத்திஜீவிகளின் வழிகாட்டலில் வெளியிடப்பட்ட அவ்வறிக்கையில்,

இலங்கை மக்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா மீது பெரும் நம்பிக்கை கொண்டுள்ள அதே வேளை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மீது அவநம்பிக்கை கொண்டுள்ளனர்.

இதன் அடிப்படையில் பாராளுமன்றத்திற்கான மக்கள் ஆதரவு ஏறுமுகமாகச் செல்வதையும் ஜனாதிபதிக்கான ஆதரவு இறங்குமுகமாகச் செல்வதையும் அவதானிக்க முடிகிறது.

ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர்களில் மூன்றில் ஒரு பங்கினர் சமாதான முன்னெடுப்பு நடவடிக்கைகளை ஆதரித்து வருகின்றனர்.ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி மற்றும் மக்கள் விடுதலை முனணி உறுப்பினர்கள் இதற்கு பெரும் எதிர்ப்பை தெரிவித்து வருகின்றனர்.

தமிழ், முஸ்லிம் மக்கள் சமாதான முயற்சிகள் மூலம் தமது அரசியல் அபிலாசைகள் நிறைவேற்றப்படுமென நம்புகின்றனர். சிங்கள மக்கள் பொருளாதார அபிவிருத்தி வெற்றிபெறுமென நம்பும் அதேவேளை மலையகத்தில் வாழும் தமிழ்,முஸ்லிம் மக்கள் தமது அன்றாட பிரச்சினைகளுக்கும், அடிப்படை பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பதன் மூலம் உரிமையை வென்றெடுக்கலாமென நம்புகின்றனர்.

யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம் சமாதானம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுமாயின் நாட்டில் வன்முறைகள், சட்ட விரோத செயல்கள்,குற்றச் செயல்கள் என்பன குறைவடைந்து மனித உரிமைகளும், சுதந்திரமும் மீட்டெடுக்கப்படும் என்பது அனைத்து மக்களினதும் எதிர்பார்ப்பாக இருப்பதை அவதானிக்க முடிகிறது எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-8)

## கூட்டணியின் திருமலை செயற்குழு இன்று கூடுகிறது

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் திருகோணமலைக் கிளையின செயற்குழுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தனின் இல்லத்தில் நடைபெறவுள்ள இந்த கூட்டத்திற்கு திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் தலைமை தாங்கவுள்ளார்.

இக்கூட்டத்தில் தற்போதைய அரசியல் நிலைபரம், கூட்டணிக்கு தோன்றியுள்ள நெருக்கடி நிலை, சமாதான முயற்சி உள்ளிட்ட முக்கிய விடயங்கள் குறித்து ஆராயப்படவுள்ளன. (தி-61)

# 'அறப்பணிச் செல்வர்' பட்டம் அமைச்சர் மகேஸ்வரனுக்கு

## திருவாவடுதுறை ஆதீன சுவாமிகள் இன்று வழங்குவார்

(யாழ்ப்பாணம்)

திருவாவடுதுறை ஆதீனத்தின் 23ஆவது குருமகா சன்னிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிய பரமாச்சாரிய சுவாமிகள், இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரனுக்கு 'அறப்பணிச் செல்வர்' என்னும் பட்டத்தை வழங்கி கௌரவிக்கவுள்ளார்.

இன்று இடம் பெறவுள்ள காரைநகர் ஈழத்துச்சிதம்பரம் சைவ சமய அறப்பணி நிலையத்தின் திறப்பு விழாவில் சுவாமிகள் அமைச்சருக்கு இப்பட்டத்தை வழங்கவுள்ளார்.

இலங்கையில் சைவசமயத்தின் வளர்ச்சிக்காக அமைச்சர் ஆற்றி வரும் அரும்பணிகளையும், அறப்பணிகளையும் ஆதரவற்றோர் நலனுக்கும் மேம்பாட்டிற்குமான வாழ்வியல் பணிகளையும் உலக சைவமக்களின் மேம்பாடடிற்காக கடந்த மே மாதம் கொழும்பில் உலக இந்த மாநாட்டை நடத்தி சாதனை புரிந்தமையும் ஆறுமுகநாவலர் ஏற்படுத்திய ஆன்மீகப் பாலத்தை புனர்நிர்மாணம் செய்தமையையும் பாராட்டி அறப்பணிச் செல்வர் என்ற பட்டம் வழங்கப்படுகிறது. (த)

## நாட்டின்...

தாயின் அது மக்களினாலேயே எடுக்க முடியுமென்றும் பிரதமர் சூளுரைத்தார்.

இம் மாநாட்டில் உரையாற்றிய காணி அமைச்சர் ராஜித சேனாரெட்ணா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மூன்று அமைச்சுக்களையும் ஏன்பொறுப்பேற்றார் என்பது எவருக்கும் விளங்கவில்லை. குரங்குபாஞ்சான் முகாமை 10 நாட்களுக்குள் அகற்ற வேண்டுமென்று பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவுக்கு உத்தரவிட்ட ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்று 40 நாட்களாகியும் இன்று வரை ஏன் அந்த முகாமை மூடவில்லை என்றும் கேள்வி எழுப்பினார். (ம)

## கைகால்...

அதிகாரி கே.மயிலேறும்பெருமாள் தலைமையிலான வைத்தியர் குழுவினால் பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

நேற்று மாலை சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. அதனைப் புதைக்குமாறு நீதிபதி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

கழுத்து நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

இதேவேளை வடமராட்சியில் பெரும் பரப்பை ஏற்படுத்தியிருக்கும் இம் மர்மக் கொலை குறித்து பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இது வரையில் இச் சம்பவம் தொடர்பாக எவரும் கைது செய்யப்படவில்லை. (இ-52,27,43)

## இலங்கையில்...

வாடகைக்கு விமானங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கும், இலங்கை விமானப்படையின் முன்னேற்றத்துக்கு சகல வசதிகளையும் செய்து கொடுப்பதற்கும் இந்திய விமானப் படையின் தளபதி முன் வந்துள்ளார்.

இரு நாட்டு பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக விளங்கும் தீவிரவாத நடவடிக்கைகளை ஒடுக்கும் வகையில் நிபுணத்துவ சேவை, உளவுப் பிரிவு பரிமாற்றத்துக்கும் இணக்கப்பாடு காணப் பட்டுள்ளது. தீவிரவாத அமைப்புக்கள் மூலம் பரஸ்பரம் இருநாடுகளுக்குமிடையே அச்சுறுத்தல்களுக்கு இடமளிக்காத வகையில் இராணுவ நடவடிக்கைகள் மற்றும் இரகசியங்களைப் பேணுதல் போன்ற விடயங்களிலும் பொது இணக்கப்பாடு ஏற்பட்டுள்ளது.

மேலும், இரத்மலானையிலிருந்து பலாலி வரை இராணுவ வீரர்களை கூடிய தொகையில் ஒரே முறையில் எவ்வித அசௌகரியமும் இன்றி கொண்டு செல்வதற்கு உரிய ஒழுங்குகள் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். இராணுவ வீரர்கள் தமது விடுமுறைகளின்போது இடைநடுவில் முகாம்களில் தங்கியிருந்து வீணாக நேர காலத்தைச் செலவிடாது துரிதமாகத் தத்தமது வீடுகளுக்குச் சென்று திரும்பவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பலகல்ல மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## அரசு...

சமரவிக்கிரம-தித்திவெல குழுவினர் உதவிப்பாதுகாப்பு அமைச்சர் அல்லது தேசிய பாதுகாப்பு அமைச்சு என்பதைப் பற்றி கலந்துரையாடி வருகின்றனர். மேலும் பாதுகாப்பு, உள்துறை என இரண்டு தனியான அமைச்சுக்களை வைத்திருந்ததாலேயே அத்துறுகிரிய இராணுவ புலனாய்வுப் பிரிவினரின் வீடு சோதனையிடப்பட்டு, அதனால் குழப்பம் ஏற்பட்டது. இவையிரண்டும் ஒன்றாக்கப்படவேண்டும்.

இதேவேளை, அண்மையில் ஜனாதிபதியால் உருவாக்கப்பட்ட ஜனாதிபதி ஊடக செயணிக்குழுவில் இணையுமாறும் சகல ஊடகங்களுக்கும் அழைப்பு விடுத்தார். (இ-6)


# யாழ்.மண்ணில் புதிய அத்தியாயத்தின் உதயம் சக்தி தொலைக்காட்சி

இப்போது தங்குதடையின்றி ஒளிபரப்பாகின்றது 'சக்தி T.V' பலவிதமான புதுமை நிகழ்ச்சியுடன்
உங்கள் நிகழ்ச்சிகளிலும் விளம்பரங்களும் MTV ஸ்தாபனத்துடன் இணைந்து செயற்படுகின்றார்கள்.
இலங்கையில் 32 வருடங்கள் அனுபவம் பெற்ற
யோ.எகட்டன் செனிற் மாக்கட்டிங் அட்வடேஸ்மன் சிஸ்ரம் ஸ்தாபனத்தார்.
உங்கள் விளம்பரங்கள் சக்தி T.Vயில் இடம் பெற வேண்டுமானால்
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

யோ.எகட்டன் செனிற் மாக்கட்டிங் அட்வடேஸ்மன் சிஸ்ரம்
சுண்டிக்குளி மகளிர் கல்லூரி முன்பாக
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல.: 0777 032188, 021 2227227 தொலைநகல்: 021 222 7227

**சக்தி T.V, சக்தி FM முகவர்கள்:**

பிரத்தியேக விளம்பரதாரரும் வீடியோ விளம்பர படப்பிடிப்பாளர்களும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

P.T.தேவா
மூளாய் வீதி, வட்டுக்கோட்டை
தொலைபேசி இல. 0777 6143541

[C/6990]


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.12.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.